
6000.00 for 6 Months
aat SRI LANKA
@
Veal Business College
No.159, Sea View Road, Trincomalee
026 222 76 22 - 077 02 03 201



அறைவு 03 இயம் 06 September 06-12 , 2014
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்


# மலைமுரசு


MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்




CCTV Installation & Maintenance
PHOTONTECH
175, Main Street Trincomalee

075 6602486


# சிங்களத்தில் தேசிய கீதம்

## அமைச்சர் ஹக்கீம் கடும் கண்டனம்



மூதூர் தள வைத்தியசாலையில் சத்திர- சிகிச்சைக் கூடத்தினை உருவாக்குவதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்திருந்த இலங்கையின் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்பட்டதற்குத் தனது கண்டனத்தைக் கடுமையாக வெளியிட்டு உள்ளார்.

கடந்த 3ம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா மற்றும் மூதூர் வைத்தியசாலைகளில் கட்டிடங்களை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்திருந்த நிதி அமைச்சர் மூதூரில் நிகழ்ந்த...............

13



# அபாயாவுக்கு ஆப்பு

## "இம்ரான் மஹ்ரூப் பின் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது"

தம்பலகமம் பிரதேச செயலகத்தில் அபாயாவுக்கு ஆப்பு! கி.மா.ச உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் குற்றச்சாட்டு என்ற தலைப்பில் 29 .08. 2014 அன்று பல இணையத் தளங்களில் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பாக, வெறும் அரசியல் நோக்கங்ளை நிறவேற்றிக் கொள்வதற்காக புனையப்பட்ட ஒன்றாகும் என தம்பலகாமம் பிரதேச செயலாளர் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் "இச்செய்தியினை தம்பலகாமம் பிரதேச செயலாளர் என்ற ரீதியில் வன்மையாக கண்டிப்பதுடன் அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

13

## கொங்கிறீட் வீதியை மண் வீதியாக்க முயற்சி

பாரதிபுரம் விநாயகர் வீதியின் நூறு மீற்றர்களைக் கொங்கிறீற் பாதையாக்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் விடுவிக்கப்பட்டிருந்த நிதியைக் கொண்டு அவ் வீதியை கிறவல் மண் வீதியாக மாற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தடுத்து நிறுத்தப் பட்டுள்ளது.

மூதூர் பிரதேசசபையின் உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்தவருமான ஆப்தீன் என்பவரால் முன்னெடுக்கப் பட்ட இந்த நடவடிக்கைக்கு பாரதிபுரம் கோயில் நிர்வாகத்....

13

## "ஆயுதங்களைக் கைவிட்டதை எண்ணிக் கவலை கொள்ள வைக்கின்றது அரசு"



ஆயுதங்களைக் கைவிட்டதை எண்ணிக் கவலைப்படும் படியாகவே தற்போதைய அரசு நடந்துகொள்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இந்தியாவின் தொலைக்காட்சி அலை வரிசையான .......

13

# ஐஎஸ்ஐஎஸ் இஸ்லாமியத் தீவிரவாதிகள் ஐந்தாண்டுகளுக்குள் இலங்கையிலும் நிலைகொள்ளத் திட்டம்



## இந்தியாவில் அல்கொய்தாவின் கிளை ஆரம்பிக்கப்பட்டது

அல்கொய்தா தலைவர் அல் ஸவாஹிறி அறிவிப்பு

## முஸ்லிம் பயங்கரவாத அச்சுறுத்தல் இலங்கைக்கு உண்டு

பாதுகாப்புச் செயலர்






மத்திய கிழக்கு நாடுகளின் எல்லைப் புறங்களைக் கைப்பற்றித் தமக்கான முஸ்லிம் நாடொன்றைப் பிரகடனம் செய்துள்ள ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகள் இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளின் சமூக வலைத்தளத்தில் வெளியாகி-யுள்ள அவர்களின் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றைக்.....

13


- வாழ்த்துகின்றோம் -

தமது 21 வருடச் சேவையினை திருமலை நகரில் நிறைவு செய்து 22வது வருடத்தில் காலடி பதிக்கும் நியூ ரிங்கோ ஸ்ரேசனர்ஸ் நிறுவனத்தாருக்கு எமது மனங்கனிந்த வாழ்த்துக்கள்......

அவர்களது புதிய காட்சியறை இன்று திறந்து வைக்கப்படுகின்றது......




- நண்பர்கள் -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU

இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை

malaimurasu@hotmail.com 075-4252042


## மொழியினால் சிறுமைப்படுமா தேசிய கீதம்...?

தேசிய கீதத்தை எந்த மொழியில் இசைப்பது என்பது இன முரண்பாட்டை உருவாக்கும் ஓர் விடயமாக இலங்கையில் உருவாகிவிட்டது.

தேசிய கீதம் என்பதைப் பற்றி விக்கிப்பீடியா சொல்வதை இங்கு பார்த்தோமானால் "நாட்டுப்பண் அல்லது நாட்டு வணக்கப் பாடல் என்பது ஒரு நாட்டின் மக்கள் தம் நாட்டின் மீது அன்பும் பற்றுணர்வும் தோன்றுமாறும், நினைவூட்டுமாறும் அமைந்த நாட்டுணர்ச்சி மிக்க ஓர் இசைப்பாடல். இப்பாடலைப் பாடும் பொழுது தம் நாட்டின் பழக்க வழக்கங்களும், வரலாறும், உயர்வாகத் தாம் கொள்ளும் கொள்கைகளும், நாட்டிற்காக உயிரிழந்த, உழைத்த பெருமக்களின் நினைவும், பொதுவாக நாட்டைப்பற்றிய ஆழுணர்வுகளும் மேலெழுமாறும் பாடும் ஒரு நாட்டு வணக்கப் பாடல். இதனை "தேசிய கீதம்" என்றும் கூறுவார்கள். இந்த நாட்டுப்பண் அல்லது நாட்டு வணக்கப் பாடல் என்பது மரபு வழியாகவோ, அல்லது ஒரு நாடு தன் அரசின் ஏற்பு பெற்ற வடிவம் என்றோ அறிவித்து ஏற்றுக் கொள்ளும்" எனத் தெரிவித்துள்ளது.

இங்கு குறிப்பிடப்பட்டபடி தேசிய கீதம் இசைக்கப்படும் போது அக் கீதம் மக்கள் மனங்களில் தம் நாட்டின் மீது அன்பையும், பற்றுணர்ச்சியையும், நாட்டுணர்சியையும் உருவாக்க வேண்டும் என்பதே மிகப் பிரதானமானது. எனவே அக் கீதம் எந்த மொழியில் இசைக்கப்பட்டால் இவ்வுணர்ச்சிகளை ஏற்படுத்த முடியுமோ அந்த மொழியிலேயே பாடப்பட வேண்டும் என்பதில் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லை.

ஆனால் உலகமெல்லாம் ஒற்றுமையையும் நாட்டுணர்ச்சியையும் உருவாக்கும் ஆற்றல் வாய்ந்நததுதம் மானுடர்களால் உருவாக்கப்பட்டு மானுடர்களாலேயே இசைக்கப்படும் இந் நாட்டுப் பண் இலங்கையில் மட்டும் அதன் உயரிய உள்நோக்கத்தில் இருந்து வழுகிச் செல்கின்றதாகவே தெரிகின்றது.

உலகமே போற்றும் ஒரு மகானின் சிலையை ஆக்கிரமிப்புச் சின்னமாக இலங்கையில் உருவாக்கிவிட்டுள்ள இனத்துவேசச் சக்திகளின் கையில் சிக்குண்டுள்ள தேசிய கீதமும் ஒரு ஆக்கிரமிப்பின் வடிவமாக உணரப்படுவது இனத்துவ ஒற்றுமையை மீளப்பெறமுடியாத குழிக்குள் அமிழ்த்தும் செயற்பாடாகவே பார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறானதொரு நிலை இலங்கைக்கு ஏற்பட முதலே பல நாடுகளுக்கு ஏற்பட்டதை அடுத்து தேசிய ஒற்றுமையை உருவாக்கும் நோக்குடன் அந்நாடுகள் தமது தேசிய கீதத்தை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து மொழிகளிலும் பாடி வருகின்றன.

கனடா இரண்டு மொழிகளிலும், சுவிட்சலாந்தில் நான்கு மொழிகளிலும் இசைக்கப்படும் தேசிய கீதம் தென்னாபிரிக்காவில் ஒரே பாடலலில் ஐந்து மொழிகளை உள்ளடக்கியுள்ளதை நாம் அறியலாம். அதற்கும் மேல் ஸ்பானியா தனது தேசிய கீதத்தை 2007ம் ஆண்டுவரை வெறுமனே இசையாக மட்டும் கொண்டிருந்ததையும் அறியலாம்.

தேசிய கீதத்தின் அடிப்படையே மக்களிடையே ஒன்றித்த உணர்வினை உருவாக்குவது என்பதைப் புரிந்துகொள்ளத் தவறுபவர்கள் யார்? இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ்ப்பாடப் புத்தகங்கள் தமது புகப்பில் தமிழிலேயே கொண்டிருப்பதால் தமிழ் மாணவர்கள் தமிழில் அக் கீதத்தை இசைத்தால்தான் ஒன்றித்த உணர்வைப் பெற்றுக்கொள்வர் என்பதை புரிய முடியாதபடி தடுக்கும் இழிந்த உணர்வாளர்களின் கண்களுக்குத் தேசியகீதம் கூட ஆக்கிரமிப்பின் மொழிபெயர்ப்பாகத் தெரிகின்றது....

## கிழக்கில் இரகசியமாக ஷரிஆ சட்டம்




இலங்கையின் கிழக்குப் பகுதியில் இரகசியமாக ஷரிஆ சட்டம் அமுல்படுத்தப்படுவதாக சிங்கள மொழிப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொடரும் அச்செய்தியில் இலங்கையில் ஷரிஆ சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது எனவும் அடிப்படைவாத கொள்கைகளை மையமாகக் கொண்ட ஷரிஆ சட்டங்கள் இலங்கைக்கு பொருந்தாது. ஷரிஆ சட்டங்களை போதிக்கும் பாடசாலையொன்றை ஆரம்பிக்க கிழக்கு அரசியல்வாதி ஒருவர் முயற்சித்து வருகின்றார். இந்த நடவடிக்கையானது உள்நாட்டில் அடிப்படைவாதத்தை போசிக்கும் முயற்சியாகும். ஷரிஆ சட்டங்களை போதிக்கும் பாடசாலைகளை ஆரம்பிக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அரசாங்கத்தின் சிரேஸ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது..

## அறநெறிப் பாடசாலைக்கு உதவிகள்



மூதூர் மணற்சேனை கிராமத்தின் சித்தி வினாயகர் அறநெறி பாடசாலைக்கு கொப்பிகளும் சீருடைத் துணிகளும் மூதூர் இந்துக் குருமார் சங்கத்தின் முயற்சியால் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை இந்து மாமன்றம் மற்றும் இந்துக் கலாசார அமைச்சு ஆகிய அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படத்திப் பெற்றுக்கொண்ட உதவிகளே இவ்வாறு வழங்கப்பட்டதாக இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ. பாஸ்கரன் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அறநெறி ஆசிரியர்களுக்கான கைநூல் மற்றும் பாடசாலை நிர்வாக ஏடுகள் என்பனவும் இதன் போது வழங்கப்பட்டுள்ளன.

## கிழக்கின் முதலமைச்சர் தனது இனத்திற்குத் துரோகமிழைக்கின்றார்



கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், முஸ்லிம் சமூகத்துக்கு துரோகமிழைத்து வருகிறார் எனக் கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தால் முஸ்லிம் சமூகத்துக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றுமொரு அடாவடித்தனம் கருமலையூற்று புராதன பள்ளிவாயல் உடைப்பாகும். இது தொடர்பாக இம்மாதம் 19ஆம் திகதி கிழக்கு மாகாண சபையில் காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றன.

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களை ஒரு வார காலத்துக்குள் அழைத்துச் சென்று குறித்த பள்ளியைக் காட்ட ஏற்பாடு செய்வதாக இதன் போது முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார்.

அவரது வாக்குறுதிப்படி ஒரு வாரம் முடிந்து விட்டது. எனினும் அவர் சொன்னபடி எதையும் செய்யவில்லை. சமூகத்தை ஏமாற்றுவதற்காக அவ்வப்போது பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வருவது அவரது வழமையாகும். இருந்த போதிலும் ஒரு கௌரவமான சபையில் சமூக நலன் சார்ந்த விடயம் ஒன்றில் அவர் அளித்த வாக்குறுதியை அவரே காற்றிலே பறக்க விடுவது என்பது சமூகத்துக்கு செய்கின்ற பாரிய துரோகமாகும் என மஹ்ரூவ்வின் அறிக்கை தொடர்கின்றது.

(றஹீம்)

## அனிஸ்டஸ் ஜெயராஜாவின் கின்னஸ் முயற்சி

### இலக்கிய உலகிற்கு ஓர் உந்து சக்தி – திருமலை முத்தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மாயன் பாராட்டு



தொடாந்து 12 மணி நேரம் ஓய்வின்றி " கரன்சி இல்லாத உலகம்" என்ற தலைப்பில் தொடரொன்றை எழுதி முடித்துள்ள சிரேட்ட எழுத்தாளரான அனிஸ்டஸ் ஜெயராஜா அவர்களின் முயற்சி இலக்கிய உலகிற்கு ஓர் உந்து சக்தியாகத் திகழ்கின்றது என திருகோணமலை முத்தமிழ்ச் சங்கத்தின் சார்பில் மலைமுரசின் பிரதம ஆசிரியர் மாயன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலக்கியம் சார்ந்து கின்னஸ் சாதனைகளைப் படைப்பது அருகிவரும் இவ்வேளையில் 12 மணிநேரம் 77 பக்கங்களில் 7582 சொற்களில் இத் தொடரை எழுதியிருப்பது ஒரு சாதாரண விடயமல்ல எனத் தெரிவித்த அவர் இச் செயற்பாட்டைச் செவ்வனே ஒழுங்கமைத்த திருமலை நவம் அவர்களுக்கும் பாராட்டைத் தெரிவித்தார். (படம் - அச்சுதன்)

## இன்னர் வீல் கழக நிர்வாகிகள் தெரிவு



திருகோணமலை இன்னர்வீல் கழகத்தின் 13ஆவது தலைவர் பதவி ஏற்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை (2) டைக் வீதியிலுள்ள ரொட்டறி இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை மறைமாவட்ட வணக்கதுக்குரிய தந்தை நோயல் இமானுவல், திருகோணமலை ரொட்டறி கழகத்தின் தலைவர் கார்மன் அன்ரனி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இன்னர்வீல் கழகத்தின் 2014, 2015ஆம் வருடங்களுக்கான தலைவியாக திருமதி ஸ்பெக் சிவசுதன் பதவி ஏற்றுக் கொண்டார்.

செல்வ இசை நடன சபா மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வின் போது, மாணவர்களுக்கு புலமைப்பரிசில், துவிச்சக்கர வண்டி, மூக்கு கண்ணாடி [illegible] வழங்கி வைக்கப்பட்டன.

(கதிரவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## Ceylon Today

### சனாதிபதி தேர்தல் ஜனவரி 03ல்



உள்ளகத் தகவல்களின் அடிப்படையில் சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் ஜனவரி 03 இல் நடைபெறலாம் என தெரிகின்றது.

அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாக மீயுயர் நீதிமன்றத்தை நாடுவதா அல்லது அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதா சாத்தியமானது என தமது சட்டவாளர்களுடன் கலந்தாலோசித்துள்ளது.

நவம்பர் மாதம் 20ந் திகதி சனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியாக உள்ளது. இவ் அறிவிப்பிற்கு முதல் நாள் சனாதிபதியின் நான்காண்டுப் பதவிக் காலம் நிறைவுக்கு வருகின்றது.

### ஜாதிக ஹெல உறுமயவின் அரசியலமைப்பு திருத்த யோசனைகள் வெளியாகின

நல்லதோர் நாளைய எதிர்காலத்தை நோக்கி நாட்டை முன்னகர்த்தல் என்ற தலைப்புடன் ஜாதிக ஹெல உறுமயவின் அரசியலமைப்பு திருத்த யோசனைகள் வெளியாகியுள்ளன.

நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்துவதுடன் மந்திரி சபையை 20 தொடக்கம் 25 அமைச்சர்களுக்குள் மட்டுப்படுத்தும் யோசனைகளையும் இம் முன்மொழிவு கொண்டுள்ளது. முன்னாள் உயர்நீதி அரசர் சரத் என்.சில்வாவினால் உருவாக்கப்பட்டுள்ள இம் முன்மொழிவை ஜே.வி.பி சோசலிச கட்சி, கம்யூனியஸ்ட் கட்சி, லங்கா சமசமாசக் கட்சி ஆகியன ஆமோதித்துள்ளன என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

### மூன்றாவது தடவை சனாதிபதி போட்டியிட அரசியலமைப்பை மாற்ற வேண்டும்

சனாதிபதி தேர்தலில் மூன்றாவது தடவையாகவும் சனாதிபதி போட்டியிட வேண்டுமானால் அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என முன்னாள் உயர் நீதி அரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.



ஏனெனில் 18ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது சனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்தில் இருந்துள்ளார். அதனால் 18ஆவது திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட எத்தனை தடவையும் சனாதிபதியாக இருக்கலாம் என்ற வாய்ப்பை சனாதிபதி பயன்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார்.

எனவே 18ஆவது திருத்தத்தில் மேலும் ஒரு சரத்தை 'தற்போதைய சனாதிபதியும் தேர்தலில் போட்டியிடலாம்'. எனச் சேர்க்கும் பட்சத்தில் மூன்றாவது தடவையும் போட்டியிடலாம் என்று சில்வா தெரிவித்துள்ளார்.


## HIV / AIDS

### சுவரொட்டி ஓவியப் போட்டி

இலங்கையின் AIDS ஸ்தாபனம் சமூக விழிப்புணர்வு பங்காளரான கால்டெக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து ஓவியப் போட்டியொன்றை நாடளாவிய ரீதியில் நடத்துகின்றது. 25 ஓ 20 அங்குல பிரிஸ்டல் போட்டில் எவ்வகையான வர்ணங்களை பாவித்து வரையமுடியும்.

12 வயதிற்கு கீழ்ப்பட்ட சிறுவர்களுக்கான பிரிவு, 13- 19 வயது இளைஞர் பிரிவு, 21 வயதிற்கு மேல் பெரியவர் பிரிவு என நடத்தப்படும் இப்போட்டியில் பல்லாயிரக்ணக்கான ரூபா பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

உங்களுடைய ஆக்கங்கள் 04.11.2014ஆம் திகதிக்கு முன் **இலங்கை எய்ட்ஸ் ஸ்தாபனம், இல06, விஜயராம மாவத்தை, கொழும்பு - 07** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

தேர்வு செய்யப்படும் சுவரொட்டிகள் ஓவியங்கள், இல 100, சுதந்திர சதுக்கம், கொழும்பு - 07 இல் டிசம்பர் 4ம், 5ம் திகதிகளில் காட்சிக்கு வைக்கப்படும்.


## Sunday Observer

### பாலஸ்தீனியர் : நன்றி தெரிவிப்பு




ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாகப் பெற்றுக் கொண்ட பாலஸ்தீனிய அரசு தமது நன்றியறிதலை தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் இலங்கைக்கான பாலஸ்தீனிய தூதுவர் இந்நன்றியினை தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் இடாப்பு வலைத்தளத்தில்




இலங்கையின் வாக்காளர் இடாப்பினை வலைத்தளத்தில் பார்வையிடும் வசதியினை தேர்தல் திணைக்களம் உருவாக்கியுள்ளது.

இம்மாதம் முதல் இவ் வசதியை பாவிக்க முடியும் என்பதுடன் தேர்தல் திணைக்கள வலைப்பின்னல் முகவரியூடாக இத் தகவற் தளத்தை அடையமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2020இல் 50,000 வெளிநாட்டு மாணவருக்கு அனுமதி

MINISTRY OF HIGHER EDUCATION SRI LANKA

உள்ளூர் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படும் வெளிநாட்டு மாணவரின் எண்ணிக்கையை எதிர்வரும் 2020 இற்குள் 50,000 ஆக உயர்த்திக் கொள்ள உயர்கல்வி அமைச்சு தூர நோக்குடன் செயற்படுவதாக அவ்வமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டில் 300 ஆக இருந்த வெளிநாட்டு மாணவரின் எண்ணிக்கை தற்போது 3,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் 2016இல் இத் தொகை 10,000 ஆக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## The Sunday Times

### பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு மேலும் 230 பில்லியன்

Ceylon Petroleum Corporation

பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதும், நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதுமான இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை காப்பாற்ற அடுத்துவரும் இரண்டாண்டுகளுக்கு சுமார் 230 பில்லியன் ரூபாய்களை அரசு முதலிட உத்தேசித்துள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகளை மேம்படுத்த மட்டும் சுமார் 195 பில்லியன்கள் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் விமான ஜெட் இயந்திர எரிபொருளை கட்டுநாயக்க விமானத்தளத்திற்கு நேரடியாக வினியோகிக்கும் குழாய்களை பொருத்தவும், மகம்புற ம.ரா துறைமுகத்திலிருந்து மத்தள ம.ரா விமான நிலையத்திற்கு நேரடியாக எரிபொருள் வினியோகிக்கும் குழாய்களை பொருத்தவும், கட்டுநாயக்க வான்தளத்திலிருந்து எரிபொருள் முறைமையை மேம்படுத்தவும் எஞ்சிய தொகை செலவிடப்படவுள்ளது.

### புதிய காணிச் சட்டம் பட்டியலிடப்பட்ட கம்பனிகளைப் பாதிக்கும்

வெளிநாட்டவருக்கு காணிகளை விற்பதை தடை செய்யும் புதிய சட்ட மூல முன்வரைபானது கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளை பாதிக்கும். ஏனெனில் கடந்த 20 வருடங்களுக்குள் உள்நாட்டுக் கம்பனியொன்று காணியைக் கொள்வனவு செய்திருந்தால் அக் கம்பனியின் பங்குகளின் பெரும் பகுதியை வெளிநாட்டவர் ஒருவர் கொள்வனவு செய்து அக் கம்பனியை தனக்குரிமையாக்கியிருந்தால் காணிக் கொள்வனவானது இப்புதிய சட்டப்படி இல்லாமற் போய் வறிதாகும்.

01 ஜனவரி 2013 முதல் அமுலாகும் இச்சட்ட மூலத்தால் கம்பனிகள் இடர்ப்பட [illegible] என சட்டவாளர்கள் [illegible]

## Sunday Leader

### நிபந்தனையுடன் பேச்சுவார்த்தை

#### த.தே.கூ

இலங்கை அரசுடன் பேச்சிற்குத் திரும்புவதாயின் அது நிபந்தனையுடன் கூடியதாகவே இருக்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவ சேனாதிராசா லீடருக்கு செவ்வியுள்ளார்.

த.தே.கூ அரசுடன் தேர்வுக்குழு ஊடாகப் பேச எப்போதும் தயாராகவே உள்ளது. ஆனால் பேச்சுக்களில் இருந்து தன்னிச்சையாக 2012இல் விலகியது அரசாங்கமே என அவர் மேலும் கூறியுள்ளார்.

இப்போது சனாதிபதியே எம்மைப் பேச்சுக்கு அழைக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளார். முறிந்த இடத்திலிருந்து பேச்சுக்களைத் தொடரவே நாம் நிரும்புகின்றோம். புதிதாகப் பேச்சுக்களைத் தொடங்குவதும் அர்த்தமற்றது என அவர் தனது செவ்வியில் குறிப்பிட்டுள்ளார்.

### தேர்தல் விதிகள் – இலங்கை மனித உரிமை பேரவை வெளியீடு

ஊவா தேர்தலை முன்னிட்டு கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகளை இலங்கை மனித உரிமைப் பேரவை வெளியிட்டுள்ளது. 11 முன்மொழிவுகளுடன் இவ் ஒழுங்குவிதிகள் தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பொதுச் சொத்துக்களும், பொதுப் போக்குவரத்து வசதிகளும் தேர்தல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதை தேர்தல் சட்டமீறலாகத் தாம் அவதானித்திருப்பதாகத் தெரிவித்த மனித உரிமைப் பேரவை சூழலை மாசாக்கும் வகையிலும் தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

### Elections "நடவடிக்கை எடுத்து விடுவேன்" தேர்தல் ஆணையர்




ஊவா மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு அதிகரித்து வரும் தேர்தல் வன்முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்த உரியவர்கள் முன்வராவிட்டால் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுவேன் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### "நாங்கள் கடமையைச் செய்தோம்" காவல்துறை

வாரியப் பொலவில் தாக்குதலைத் தொடுத்த பெண் தான் கைது செய்யப்பட்டமை ஓர் அடிப்படை மனித உரிமை மீறல் என தெரிவித்து காவல்துறைக்கு எதிராக வழக்கினைத் தொடுத்துள்ள நிலையில் காவல்துறை தமது கடமையையே செய்துள்ளதாக அறிக்கையிட்டுள்ளது.

### நுரைச் சோலையில் மேலும் அதிகாரங்களைக் கைப்பற்றும் – சீனா

அடிக்கடி தனது பணியை நிறுத்திக் கொள்ளும் 1.35 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் உருவாக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின்நிலையப் பராமரிப்பு நடவடிக்கையில் சீனா உதவியளிக்க முன்வந்துள்ளது.

இதற்கென இரண்டு இணங்கியொழுகும் உடன்பாடுகளில் (MOU) எதிர்வரும் 16ஆம் திகதி இரண்டு நாள் பயணத்தில் இலங்கை வரவுள்ள சீன சனாதிபதியின் வருகையின் போது இரு நாடுகளும் கையெழுத்திடவுள்ளன.

எதிர்வரும் காலங்களில் நுரைச்சோலை மின் பிறப்பாக்கப் பணிகளில் எவ்வித தடங்களும் நிகழாது என்பதை இவ்வுடன்பாடுகள் மூலம் சீனா உறுதிப்படுத்தும் என மின் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பினர் மோடியுடன் என்ன பேசினார்கள்?

அரசியல் ஆய்வு

றொபர்ட் அன்டனி
தமிழ்கிங்டொம் (www.tamilkingdom.com)




"இந்தியா" என்பதே கடந்த சில வாரங்களாக இலங்கையில் பேசப்பட்ட வார்த்தையாக இருந்தது. அந்தளவுக்கு திடீரென இந்தியா தொடர்பில் இலங்கையில் அலசப்பட்டது. பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர் சுப்ரமணியம் சுவாமியின் இலங்கை விஜயம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயம் என்பன தற்போதைய இந்த நிலைமைக்கு அடித்தளத்தை இட்டன.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்திய விஜயமானது நாட்டின் அரசியல் சூழலில் பாரிய சலசலப்பை ஏற்படுத்திவிட்டது. "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு விஜயம் செய்து இந்திய பிரதமர் மோடியை சந்தித்து பேச்சு நடத்தியது சாதாரண விடயம். பிரதமர் மோடி பதவியேற்றவுடன் இலங்கை ஜனாதிபதியை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடலை நடத்தியிருந்தார். இந்நிலையில் கூட்டமைப்பினருடனான இந்திய தரப்பின் சந்திப்பை மட்டும் ஏன் பெரிதுபடுத்தவேண்டும்" இவ்வாறு முக்கிய தூதரக அதிகாரி ஒருவர் சில தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளர்களிடம் கேள்வியெழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய தரப்பை சந்தித்து பேச்சு நடத்தியமையானது சாதாரண விடயம்தான். ஆனால் இதுவொரு சலசலப்பான விடயமாக உருவெடுத்து முக்கிய வெளிநாட்டு தூதரக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுக்கூறுமளவுக்கு இந்த சந்திப்பு தற்போது முக்கியத்துவம் பெற்றுவிட்டது என்பதனை புரிந்துகொள்ளவேண்டும்.

அத்துடன் கூட்டமைப்பின் இந்திய விஜயத்துக்கு ஆளும் தரப்பிலிருந்து விசனங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுவருகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்கு சென்றாலும் வேலையில்லை. எங்களிடம் வந்தாலே தீர்வு கிடைக்கும் என்பதே ஆளும் கூட்டணியின் கருத்தாகவுள்ளது.
எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வகையிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையிலும் இந்திய பிரதமரை சந்தித்து எமது பிரச்சினைகள் குறித்து எடுத்துரைத்தோம் என்று கூட்டமைப்பின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சியில் பிரதமர் மோடி பதவிக்கு வந்த பின்னர் இந்திய மத்திய அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான போக்கை கடைப்பிடித்தது.

குறிப்பாக இலங்கை விவகாரத்தில் சர்வதேச தலையீடுகள் இருக்கக்கூடாது என்றும் தீர்வு விடயத்தில் இந்தியா அழுத்தங்க ளை வழங்க முடியாது என்ற தொனியிலுமே இந்திய தரப்பில் கருத்துக்க்ள் வெளியிடப்பட்டுவந்தன. இது நாட்டின் சில தரப்புக்கள் மத்தியில் இந்தியாவின் நிலைப்பாடு தொடர்பில் ஒருவித வியப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் இலங்கை க்கு விஜயம் மேற்கொண்ட இந்திய ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கியஸ்தர் சுப்ரமணியம் சுவாமி இந்திய மத்திய அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்துடன் முன்னெப்போதும் இல்லாத நெருக்கமான போக்கை கடைப்பிடிக்கின்றது என்ற எண்ணத்தை உறுதிப்படுத்துவது போன்று கருத்துக்களை வெளியிட்டார்.

உதாரணமாக ஒரு கட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவுக்கு சென்று மோடியை சந்திக்கவேண்டுமானால் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துவிட்டே செல்லவேண்டும் என்று அவர் கூறியதாக ஊடகங்களில் அறிக்கையிடப்பட்டது. இலங்கையில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய சுவாமி உணர்ச்சி பூர்வமாக செயற்படுவதை விடவும் தந்திரோபாயமாக செயற்பட்டால் மட்டுமே தமிழர்கள் அதிகாரப் பகிர்வை நோக்கி பயணிக்க முடியும்.

தேர்தல் வெற்றியின் பங்குதாரர்களாக தமிழ் மக்கள் செயற்பட வேண்டுமே தவிர தனி சமூகமாக செயற்படக் கூடாது என்றும் கூறியிருந்தார். அத்துடன் இலங்கையில் இனப்பிரச்சினையொன்று இல்லை. யுத்தம் முடிவிற்கு வந்தவுடன் இலங்கையில் பிரச்சினைகளுக்கான வழிகள் மூடப்பட்டு விட்டன. இன்று இலங்கையில் மொழி ரீதியான பிரச்சினைகளே உள்ளன. சிங்கள, தமிழ் என தனித்தனியாக செயற்படுகின்றமையே பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றது.

அதே போல் இலங்கையின் உள்ளக விடயங்களில் இந்தியா தலையிடவிரும்பவில்லை. அதற்கான உரிமைகளும் எமக்கில்லை. எனினும் வெளிப்படையான விடயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்திய மத்திய அரசாங்கத்தின் தீர்மானம் எடுப்பவர்கள் மட்டத்தில் இருக்கும் ஒருவரின் தோரணையில் சுப்ரமணியம் சுவாமியின் கருத்துக்கள் அமைந்திருந்தன என்பதே பலரதும் கருத்தாக அமைந்திருந்தது. இந்நிலையில்தான் சுப்ரமணியம் சுவாமி இலங்கையில் வைத்துக்கூறிய கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்ட ரீதியில் அவர் இலங்கையில் இருக்கும்போதே கூட்டமைப்பினருக்கு இந்தியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த இடத்தில் இதன் பின்னணி என்னவாக இருக்கும் ஏன் இவ்வாறு நடந்தது என்பதனை தற்போது நாம் ஆராய்வதைவிட சந்திப்பின் தாக்கங்கள் மற்றும் இந்தியாவின் போக்கில் திடீரென ஏற்பட்ட மாற்றம் என்பன குறித்தும் ஆராயவே விளைகின்றோம்.
த.தே.கூட்டமைப்பினர் முதலில் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜையே சந்தித்து உரையாடியிருந்தனர். அதன் பின்னர் கடந்த சனிக்கிழமை இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

அதாவது த.தே.கூட்டமைப்பினருடனான சந்திப்பின் ஊடாக இலங்கையின் தேசிய பிரச்சினையின் அடிப்படைத்தன்மையை மோடி ஆழமாக அறிந்துகொள்ள முயற்சித்துள்ளார் என்பது தெளிவாகின்றது. இதன்மூலம் மோடியின் பதவியேற்பிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்று அணுகுமுறையை வெளியுறவுத் துறையில் முன்னெடுத்துவந்த மோடி அரசாங்கம் திடீரென சற்று மாறுபட்டபோக்கை கடைப்பிடிக்கின்ற தோற்றப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சந்திப்பில் கருத்து வெளியிட்டிருந்த இந்திய பிரதமர் மோடி, இலங்கையில் உள்ள சிறுபான்மை தமிழ் மக்களின் கௌரவம், சம உரிமை, சுயமரியாதை, நீதி என்பனவற்றை இலங்கை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படவேண்டும். இலங்கையின் அனைத்து தரப்புக்களும் ஒன்றிணைந்து விட்டுக்கொடுப்புடன் அரசியல் தீர்வைக்காண முன்வரவேண்டும்.

இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அது மட்டுமன்றி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைவிட கூடுதலான அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும் என இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்தும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி கூட்டமைப்பின் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்திய பிரதமருடனான சந்திப்பையடுத்து நாடு திரும்பியுள்ள கூட்டமைப்பினர் இந்திய தரப்புக்களுடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். இதற்கு முன்னரும் இந்திய விஜயங்களை மேற்கொண்ட பின்னர் கூட்டமைப்பினர் இவ்வாறு "திருப்திகரமாக" அமைந்தது என்ற வார்த்தையை பல தடவைகள் பிரயோகித்துள்ளனர். ஆனால் இம்முறை அவர்களின் கூற்றில் நம்பிக்கை வெளிப்படுவதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் கூட்டமைப்பின் திடீர் இந்திய விஜயமானது அரசாங்க தரப்பை விசனமடையச் செய்துள்ளது. எவ்வாறெனினும் மோடியுடனான சந்திப்பின்போது கூட்டமைப்பினர் இலங்கைக்கு விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு கோரியதாகவும் எனினும் அதனை மோடி ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இலங்கையின் நிலைமையை ஆராய தூதுக்குழு ஒன்றை அனுப்புமாறு கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையையும் மோடி தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. இந்த இரண்டு விடயங்களும் அரசாங்கத்தை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது என்று கூறலாம். எவ்வாறெனினும் கூட்டமைப்பின் இந்திய விஜயம் ஆளும் கூட்டணியை விசனமடைய வைத்துள்ளது என்பதற்கு அமைச்சர்கள் கூறிவருகின்ற விடயங்களே சான்று பகர்கின்றன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு விஜயம் செய்து அரசாங்கத்துக்கு எதிராக பொய்யான முறைப்பாடுகளை செய்துள்ளமை தொடர்பில் அரசாங்கம் ஆச்சரியமடையவில்லை. காரணம் வரலாறு முழுவதும் கூட்டமைப்பினர் இவ்வாறே செயற்பட்டுவந்துள்ளனர் என்று கடும் விசனத்தை வெளியிட்டிருந்தார். இலங்கையில் சட்டங்களை நிறைவேற்றுவது இலங்கை பாராளுமன்றம் என்பதனை கூட்டமைப்பு தெரிந்துகொள்ளவேண்டும். பாராளுமன்றத் தெரிவுக்குழுவுடன் கூட்டமைப்பு இணைந்து செயற்படவேண்டும் என்பதே இந்தியாவினதும் விருப்பமாகும்.
எனினும் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு இன்னும் வரவில்லை. தற்போது இந்தியாவுக்கு சென்று கூட்டமைப்பு இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளது என்றும் அவர் கூறியிருந்தார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மட்டுமன்றி பல அமைச்சர்களும் கூட்டமைப்பின் இந்திய விஜயம் குறித்து விசனம் தெரிவித்திருந்தனர். அதாவது, கூட்டமைப்பினர் எங்கு சென்றாலும் தீர்வு தேவையாயின் எம்மிடமே வரவேண்டும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது. காரணம் அந்தளவுக்கு இம்முறை கூட்டமைப்பின் இந்திய விஜயம் முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துவிட்டது. கூட்டமைப்பினருடன் இந்தியா சென்று நாடு திரும்பிய இலங்கைக்கான இந்தியதூதுவர் வை.கே.சின்ஹா கொழும்பில் வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது சில முக்கியமான விடயங்களை முன்வைத்தார்.
அதாவது, அரசாங்கம் யுத்தத்தை வென்றுள்ளது. இந்நிலையில் யுத்தத்தின் பின்னரான நிலையில் சமாதானத்தை அரசாங்கம் வெற்றிகொள்ளவேண்டியுள்ளது. இது முக்கியமானதாகும். அனைத்து தரப்புக்களும் ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான முறையில் செயற்பட்டு தேசிய பிரச்சினைக்கு தீர்வைக் காணவேண்டும் என்று கூறியிருந்தார்.
அத்துடன் இவ்வருட இறுதியில் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என எதிர்பார்க்கின்றோம். இலங்கையில் என்ன நடந்தாலும் அது இந்தியாவில் தாக்கத்தைக் கொண்டுவரும் என்றும் இந்திய தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.
உண்மையில் இந்திய தரப்பும் இலங்கை தரப்பும் வலியுறுத்துவதைப்போன்று இரண்டு நாடுகளுக்கும் இடையில் இருக்கின்ற உறவு வலுவானது, விசேடமானது. என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். பிராந்திய வல்லமை படைத்த நாடு என்ற வகையில் இந்தியா இலங்கைக்கு முக்கியமான நாடாகும். மறுபுறம் மிக அருகில் இருக்கின்ற கேந்திர முக்கியத்துவ நாடாக இலங்கை இருக்கின்றமை இந்தியாவுக்கு மிக முக்கியமானதாகும்.

அந்தவகையில் பிராந்தியத்தில் வேறு நாடுகளில் இல்லாத அக்கறை இலங்கை மீது இந்தியாவுக்கு இருக்கலாம். இலங்கையில் என்ன நடந்தாலும் அது இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இந்திய பிரதிநிதி கூறுவதிலிருந்தே இலங்கை மீதான இந்தியாவின் அக்கறை எவ்வாறு அமையும் என்பது தெளிவாகின்றது. ஆனால் அந்த அக்கறையானது இலங்கையில் அரசியல் தீர்வு என்ற தேவையுடன் இருக்கின்ற தமிழ் மக்களின் தீர்வு செயற்பாட்டில் ஆரோக்கியமற்ற வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாகும். இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற தடைகளும் சிக்கல்களும் காலத்துக்கு காலம் வேறுபட்டு வருகின்றன.

ஆனால் எந்தவொரு வழியிலும் தீர்வை அடைய முடியாத துரதிர்ஷ்டவசமான நிலையே தமிழ் மக்களுக்கு நீடித்துவருகின்றது. தடைகளும் சிக்கல்களும் காலத்துக்கு காலம் மாறுபட்டு வந்தாலும் தீர்வு கிடைக்காது என்பது மட்டும் நிலையாகவே இருந்துவருகின்றது. ஒரு கட்டத்தில் சமஷ்டி தீர்வுக் கட்டமைப்பு குறித்து பேசப்பட்டுவந்த நிலையில் இன்று தீர்வு விவகாரத்தில் அடிப்படை விடயமாக உள்ள அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக பெற்றுக்கொள்வதில் பாரிய தடைகளும் சிக்கல்களும் காணப்படுகின்றன.

அதனால்தான் தீர்வைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கப் படும் தடைகள் காலத்துக்கு காலம் மாறிக்கொண்டிருப்பதாக கூறப்படுகின்றது. சுதந்திரத்துக்கு பின்னரான காலகட்டத்தில் தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வு விவகாரம் தொடர்பில் பலதரப்பட்ட முயற்சிகள் இடம்பெற்றுவிட்டன. பேச்சுவார்த்தை கள், வட்டமேசை மாநாடுகள் அனைத்துக் கட்சிக் கலந்துரை யாடல்கள் என அவற்றை குறிப்பிடலாம். ஆரம்ப நிலையில் எட்டப்பட்ட உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை கள் மற்றும் திம்பு பேச்சுவார்த்தை முதல் இறுதியாக இடம்பெற்ற ஒஸ்லோ பேச்சுவார்த்தை என தீர்வை அடைவதற்கான முயற்சிகள் பல வழிகளில் முன்னெடுக்கப் பட்டன. ஆனால் இறுதியில் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு அல்லது அந்த மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வுத் திட்டங்கள் எதனையும் அடைய முடியாமல் போனது.

இந்நிலையிலேயே தமிழ் மக்களின் தீர்வு செயற்பாட்டில் இந்தியாவின் அணுகுமுறை தொடர்பாக தீவிரமாக பேசப்பட்டுவருகின்றது. தற்போது "தீர்வுக்கான இணக்கப் பாட்டை எட்டிக்கொள்வதற்கு" என்ற பெயரில் பாராளுமன்ற தெரிவுக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த விடயத்தில் கூட இந்தியாவின் உறுதியான நிலைப்பாடு இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை.

அதாவது அரசாங்கத்துடன் பேச்சு நடத்தி அதில் ஏற்படுகின்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு செல்வது குறித்து ஆராய முடியும் என்று கூட்டமைப்பு கூறுகின்றது. இந்நிலையில் கூட்டமைப்பு பாராளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் எவ்வாறு செயற்படவேண்டும் என்ற சமிக்ஞையை கூட இந்தியா வெளியிடாமல் உள்ளது. எனினும் இந்தியா ஆரோக்கியமான பங்களிப்பை செலுத்தி தீர்வைப் பெற்றுத்தரும் என்பதில் தமிழ் பேசும் மக்கள் இன்னும் நம்பிக்கையிலேயே உள்ளனர். ஆனால் அவ்வப்போது இடம்பெறுகின்ற நிகழ்வுகளும் மேற்கொள்ளப்படுகின்ற காய் நகர்த்தல்களும் தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு கிடைக்குமா என்ற விடயத்தில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

தீர்வு ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக வரலாற்றில் பல சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் பலரையும் நம்பி ஏமாற்றமடைந்தனர். குறிப்பாக இந்தியாவின் தலையீட்டுடன் முன்வைக்கப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட முழுமையாக பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது. எனவே நாட்டின் சகல தரப்புக்களும் ஏற்குமான மற்றும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறான தீர்வுத்திட்டம் ஒன்றை பெற்றுக்கொள்ள முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும்.
மாறாக தீர்வை அடைவதற்கான முயற்சிகளுக்கு முட்டுக் கட்டை போடும் வகையில் பிராந்திய அரசியல் நலனுக்கான காய் நகர்த்தல் வந்தால் அது தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றமான நிலைக்கே கொண்டு செல்லும் என்பதே யதார்த்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -வெளிநாட்டு மோகம்! யாரைத் தான் விட்டது-

... நாட்டு நடப்பு...

நெதர்லாந்திலுள்ள ஊடக மையம் ஒரு விசித்திரமான போட்டியொன்றை நடத்தியது. அதாவது அங்குள்ள கல்லூரியொன்றை சுற்றி ஓட வேண்டும். அதுவும் நிர்வாணமாக ஓடவேண்டுமென்பதே நிபந்தனையாக இருந்தது. அந்த நிபந்தனையின் அடிப்படையில் அக்கல்லூரி மாணவி ஒருவர் நிர்வாணமாக ஓடி பரிசுப் பணத்தையும் தட்டிக் கொண்டார். அந்தப் பணத்தின் சரி பாதியை அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு உதவு தொகையாக வழங்கினார். ஆனால் அவரின் எதிர்கால தேவையான கல்விச் செல்வத்தை இழக்க நேரிட்டது. குறித்த கல்லூரிக்கு அவரின் செயலால் அபகீர்த்தி ஏற்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டு நிர்வாகம் அவரை கல்லூரியிலிருந்து நீக்கியது.

இனி எங்கள் நடப்பை பார்ப்போம்... .... ...

அக்கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக இருந்து வந்தது. விவசாயமே அங்கு மிக முக்கிய தொழில். தாங்கள் விவசாயிகளாக இருந்தாலும் தமது பிள்ளைகள் படித்து முன்னேற வேண்டுமென்பதில் எவரும் மிக உறுதியாக இருந்து வந்தார்கள்.

சிவா என அக்கிராமத்தில் சகலராலும் செல்லமாக அழைக்கப்பட்ட சிவஞானம், அங்குள்ள கல்லூரியொன்றின் தமிழ் பட்டதாரி ஆசிரியர். அவரின் தந்தை அப்பகுதி மூத்த விவசாயி. மழைக்குக் கூட பள்ளிக்கூட தாவாரத்திற்குள் ஒதுங்காத அவர் எப்படியோ மகனை பட்டதாரி, அதுவும் தமிழ்மொழி சிறப்பு பட்டதாரியாக ஆக்கிவிட்டார்.

இன்று மாணவர்கள் மத்தியில் தமிழ்மொழி தொடர்பான அறிவுத்திறன் குறைந்து கொண்டு போவதை உணர்ந்த அந்த தமிழ் ஆசிரியர் மாணவர்களிடையே தமிழ் மொழிமேல் ஒரு தாகத்தை ஏற்படுத்தும் வகையில் நவீன தந்திரோபாயங்களை உபயோகித்து தமிழ் மொழி மேல் அவாவை ஏற்படுத்துவதற்காக பல முன்னோடி திட்டங்களை வகுத்து முன்னெடுத்துச் சென்றார்.

பூர்வீகம் தமிழனாக இருந்தாலும் இன்று பலர் கொச்சத் தமிழில் பேசிவருவதை நாம் கண்டிக்கின்றோம். இன்று சுத்தமான தமிழை கேட்பதே மிகமிக அரிதாகவுள்ளது. ஒன்றில் தமிழுடன் சிங்களம் கலந்திருக்கும். இன்றேல் ஆங்கிலம் கலந்திருக்கும். மேலும் கலந்து பேசுவதையே சிலர் நாகரீகமாக கருதுகிறார்கள்.

சில பிரதேசங்களில் தமிழ் மொழியுடன் இன்னும் பல உள்ளூர் மொழிகள் கலந்து உபயோகிப்பதை காணக் கூடியதாகவுள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கு தொழிலின் நிமித்தம் சென்றுவந்தவர்களும், மத்தியதரை நாடுகளுக்கு சென்றுவருபவர்களும், தமிழுடன் அந்தந்த நாட்டு



மொழிகளை கலந்து பேசி வருகிறார்கள். அயல் நாடான இந்தியா இன்று தமிழ் மொழியை செம்மொழியாக மாற்றிக் கொண்டுவரும் வேளையில் நாம் இன்னமும் கலப்பு மொழிகளில் பேசிக் கொண்டிருப்பது கவலைக்குரியதே.

சிவஞானம் அப்பகுதி கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு தமிழ்மொழி ஆசிரியராக கடமையாற்றி னாலும் அங்குள்ள தமிழ் அரசியல் கட்சியொன்றின் முக்கிய ஆதரவாளர்கள் அவரை எப்படியோ அரசியலுக்குள் இழுத்து வைத்துக் கொண்டனர். அதனால் கல்லூரி கடமைகளில் முழு நேரத்தையும் அவரால் செலுத்த முடியாதிருந்தது. உண்மையில் அந்த அரசியல் பிரவேசத்தை ஒரு சமூக சேவையாகவே அவர் கருதினார்.

அவரின் முழு நேர சேவை குறித்த கல்லூரிக்கு கிடைக்காததினால் மாணவர்களின் பெற்றோர் மிகவும் கவலையடைந்தனர். அந்த அரசியல் கட்சியில் கல்வி கற்றவர்கள் மிக குறைவாக காணப்பட்டதால் ஆசிரியரின் சேவை அவர்களுக்கு மிக முக்கியமானதாக இருந்தது. அக்கட்சி ஆளும் கட்சியின் பங்காளி கட்சி என்பதால், கல்வி நிர்வாகம் முட்டி மோதிக் கொள்வதை தவிர்த்துக் கொண்டது.

பகுதி நேர சேவையாளனாக கட்சி அலுவலகத்தில் கடமைபுரிந்த ஆசிரியர் தற்பொழுது முழுநேர சேவையாளனாக மாறிவிட்டார். இருந்தாலும் அவரின் சேவை தனது மாணவர்களுக்கு கிடைக்கவில்லை என்ற கவலை அவரிடமும் இருந்து வந்தது. இருப்பினும் இறைவனால் தனக்கு தரப்பட்ட ஆற்றல் எப்படியோ பயன்படுகிறது என்பதை நினைத்து ஆறுதலும், சந்தோசமும் அடைந்தார்.

குறித்த அரசியல் கட்சி ஆசிரியரின் சேவையை மதித்து நடந்து கொண்டது மாத்திரமல்ல ஆசிரியருக்கு தேவையான அனைத்து வசதிகளையும் பூர்த்தி செய்து கொடுத்து, அவரை திருப்தியடையச் செய்தது. அவர் ஒரு நடுத்தர குடும்பத்தை சார்ந்தவர் என்பதால் அரச காணியொன்றை வழங்கி அதில் வீடொன்றை நிர்மாணிக்க அனைத்து உதவிகளையும் கட்சி வழங்கியிருந்தது. எந்த வகையிலும் அவர் யோசிக்கவோ, கவலைப்படவோ, கட்சி சந்தர்ப்பத்தை வழங்கவில்லை.

சிலர் எதையும் சாதிக்க வேண்டுமென்று மனதில் ஒரு வெறியை ஏற்படுத்திக் கொண்டால் அதனால் ஏற்படவிருக்கும் எந்தவொரு பாதிப்பை பற்றியும் கவலைப்பட மாட்டார்கள். அவர் அரசியல் கட்சிக்கு உதவ முன்வந்தமைக்குக் காரணம் அப்பகுதி மக்கள் தத்தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வார்கள் என்பதே. அதனால் கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் பாழாகப் போய்விடும் என்பது பற்றி அவர் யோசிக்க தவறிவிட்டார். ஆசிரியரின் அளப்பெரிய கல்விச் சேவை அரசியல் கட்சியின் நடவடிக்கையினால் ஸ்தம்பிதமடைந்ததையிட்டு பெற்றோர் மட்டுமல்ல அப்பகுதி நலன் விரும்பிகளும் கவலையடைந்தனர்.

மேலும் அந்த தமிழ் அரசியல் கட்சி தங்கள் நோக்கம் மட்டும் நிறைவேற வேண்டுமென்பதில் உறுதியாக இருந்து கொண்டு ஆசிரியரின் சேவை கிடைக்காமையினால் எதிர்கால சந்ததியினரான அந்த கல்லூரி மாணவர்களின் எதிர்காலம் பாதிப்படையும் என்பது பற்றி யோசிக்கவில்லை. மேலும் என்னால் உங்கள் கட்சி வேலைகளை செய்ய முடியாது என்று ஆசிரியரால் கூற முடியாத நிலையில் அவர் இருந்தார்.

ஏதோ தனக்கு இறைவன் தந்த விசேட ஆற்றலை யாருக்காவது பயன்படுத்தினால் அதுவே போதும் என்ற நிலைப்பாட்டில் கட்சியின் முழு நேர பணிகளில் ஈடுபட்டு வந்தார். ஆனால் அவரிடம் மேலும் மேலும் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற அவா இல்லாவிட்டாலும் அவரின் மனைவியிடம் அந்த அவா நிலை கொண்டிருந்தது.

அவர் முழு நேரமும் கட்சி வேலைகளில் ஈடுபட்டாலும் கல்வி நிறுவனம் அவருடைய வேதனத்தை தொடர்ச்சியாக செலுத்தி வந்தது. ஆளும் கட்சியின் பங்காளி கட்சியான அக்கட்சியின் தலைவர் ஒரு பிரபல்ய அமைச்சரும் கூட. அதனால் எந்தவொரு முறைப்பாட்டுக்கும் அங்கு இடம் இருக்கவில்லை.

வெளிநாட்டு வேலையில் மோகம் கொண்ட மனைவியின் தொந்தரவை ஆசிரியரால் தாங்கமுடியவில்லை. மனைவி எப்படியும் தனது கணவரை வெளிநாட்டுக்கு அனுப்பி பணம் சம்பாதித்துக் கொள்வதிலே ஆர்வமாக இருந்தார். மனைவியின் நிர்ப்பந்தத்தினால் அவர் ஒருவருக்கும் சொல்லாமல் கொள்ளாமல் எப்படியோ சிங்கப்பூருக்கு விமானம் ஏறினார். சிங்கப்பூரில் சுமார் இரு மாதங்கள் பணிபுரிந்தார். அவர் எதிர்பார்த்த சம்பளத்தை அங்குள்ள நிறுவனம் வழங்காது இழுத்தடித்தது.

தனது சொந்த நாட்டிலே மிக கௌரவமாக தொழில்புரிந்து கைநிறைய சம்பாதித்த அவர் அங்கு தொடர்ந்தும் பணியாற்ற முடியாமல் சொந்த நாடு திரும்பினார். தற்பொழுது தனது நாட்டிலே வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தில் அங்கத்துவம் பெறும் நிலையிலுள்ளார். அந்த நிலைக்கு காரணம் அவரல்ல. அவரது மனைவி என்பதை சகலரும் தெளிவாக புரிந்து கொள்ளத் தவறவில்லை.

என்னவாக இருப்பினும் அந்த அரசியல் கட்சி அவரை கைவிடுமா என்ன? குறித்த கட்சியின் தலைவரான பிரபல அமைச்சர் தலையிட்டால் எதுதான் நடக்காது? நிலுவைச் சம்பளத்துடன் மீண்டும் ஆசிரியர் பதவிக்கு அமர்த்தப்பட்டு கட்சி வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார் அந்த ஆசிரியர்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' எனும் பழமொழியும் 'பெண் புத்தி பின்புத்தி' எனும் பழமொழியும் ஆசிரியரின் வாழ்க்கையில் எடுத்துக்காட்டாக விளங்கின. தான் முன் யோசனையின்றி பலருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியமைக்காக கட்சியின் சகல ஆதரவாளர் களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அதுமாத்திர மல்ல தனக்கு பல உதவிகளை கேட்காமலே புரிந்த, புரிந்து கொண்டிருக்கும் அமைச்சரிடம் மன்னிப்புக் கோரியது மட்டுமன்றி செய்த உதவிகளுக்கு [நன்றி]யையும் தெரிவித்துக் கொண்டார்.



தற்பொழுது வழமைபோல் தனது கடமை களில் ஈடுபட்டு வந்தாலும் அமைச்சரின் அனுமதியுடன் வாரத்தில் ஓரிரு நாட்கள் தனது மாணவர்களின் கற்பித்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார். கல்லூரி[யை]யும், கட்சி அலுவலகத்தையும் மாறிமாறி கவனித்து வருவது[ம்] எவருமே குறை சொல்லாத அளவுக்கு திருப்தியாக செயல்பட்டு வருகிறார். தனது சொந்த நாட்டில் சிறப்பு பட்டதாரியான அவர் கௌரவமான பதவிகளை வகித்து சகலராலும் பாராட்டப்பட்ட ஒருவர். ஆனால் சிங்கப்பூரில் அவருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை அவரால் ஜீரணிக்க முடியவில்லை.

எமது நாட்டின் தனியார் வேலைவாய்ப்பு பணியகத்தின் சூழ்ச்சியில் அவர் அகப்பட்டதே சகலவற்றுக்கும் காரணம். அந்த தனியார் நிறுவனத்தின் முகவர் ஒருவர் அவருக்கு கௌரவமான தொழில் வாய்ப்பும், கைநிறைய சம்பளமும் மற்றும் ஏனைய வசதிகளும் வழங்குவதாக கூறி அவரிடம் இலட்சக் கணக்கில் பணத்தை கரந்துவிட்டு சிங்கப்பூரில் அவரை அம்போ என்று தவிக்கவிட்டுவிட்டார்.

எப்படியோ சிங்கப்பூரில் அலைந்து திரிந்து தனது நண்பர் ஒருவரினது உதவியுடன் வேலை ஒன்றைப் பெற்றார். அது ஒரு வெளிநாட்டு கம்பனி. வீதி போக்குவரத்து நெரிசலில் அகப்பட்டு இறக்கும் செல்லப்பிராணிகளையும், கால்நடைகள் மற்றும் பட்சிகளையும் உடனுக்குடன் அகற்றும் தொழிலே அவருக்கு வழங்கப்பட்டிருந்தது. நம் நாட்டிலே கௌரவமாக வாழ்ந்த ஒருவர் அப்படியொரு தொழிலை புரிவதற்கு உடல்தான் ஒத்துக் கொண்டாலும் உள்ளம் ஒத்துக்கொள்ளுமா?

சிலவேளைகளில், தாமதமாக கிடைக்கும் தகவல்களினால் குறித்த பிராணிகள் அழுகிய நிலையில் துர்நாற்றத்துடன் வீதி ஓரங்களில் வீசப்பட்டிருக்கும். அவற்றைக் கூட பொருட்படுத்தாது செய்யும் தொழிலே தெய்வமென நினைத்து செயல்பட வேண்டியிருந்தது. சகலதும் ஒரு கெட்டகனவாக நினைத்து அங்கு நடந்த சம்பவங்களை அடியோடு மறந்துவிட்டார்.

சொர்க்கமாக இருந்தாலும் சொந்த நாட்டைப் போல வருமா? விதி யாரைத்தான் விட்டு வைத்தது? இராமர் கூட அரச சுக போகங்களை விட்டு 14 வருடம் வனவாசம் செல்லவில்லையா? உண்மையே பேசவேண்டும் என்ற அசையாத கொள்கையுடன் வாழ்ந்த அரிச்சந்திரனுக்கு என்ன நடந்தது?

**- பாலையூற்றான் -**




## உயிரா முக்கியம்!



துருக்கி, இஸ்தான்புலில் ஒருவர் பாலம் ஒன்றின் மீது இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். இச்சந்தர்ப்பத்தின் போது, அப்பகுதியில் நின்று கொண்டிருந்த பொலிஸ் ஒருவர் செல்ஃபி புகைப்படம் எடுத்துக் கொண்டிருந் துள்ளார். மற்ற அதிகாரிகள் தடுக்க முயன்றும் அவர்களின் பேச்சை கேட்காமல் இந்த நபர் குதித்துள்ளார். கடமையில் இருந்து தவறிய பொலிசார் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

## நாய்க்கறியால் வந்த வினை

பிரான்ஸ் தலைநகரான பாரிஸை சேர்ந்த 25 வயது சமையல்காரர் இரண்டு நாய்களை கொன்று சாப்பிட்ட குற்றத்திற்காக அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர், நாயின் கறிகள் அடங்கிய பையை குப்பைத் தொட்டியில் போட்டதை இவரின் வீட்டு பக்கத்தில் உள்ள நபர்கள் பார்த்து பொலிசில் புகார் அளித்துள்ளனர். மேலும் நாய்க்கறி உண்ண பிரான்ஸில் தடை இல்லை என்றாலும் அது உயிருடன் இருக்கும் போது கொடுமை செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்பது குறிப்பிடதக்கது.

## நேர்ந்த விபரீதம்



அமெரிக்காவை சேர்ந்த 16 வயது Chase Culpepper என்ற பெண் சமீபத்தில் தனக்கு டிரைவிங் லைசென்ஸ் எடுக்க அலுவலகத்திற்கு சென்றுள்ளார். அப்போது முகத்தில் ஃபேஸியல் செய்து பக்கா மேக்கப்புடன் சென்றுள்ளார். லைசென்ஸ் கொடுக்கும் அதிகாரி அவரை புகைப்படம் எடுக்கும்போது ஃபேஸியலையும் மேக்கப்பையும் அழித்தால்தான் புகைப்படம் எடுப்பதாக கூறியுள்ளார். வேறு வழியின்றி மேக்கப்பை கலைத்துவிட்டு புகைப்படம் எடுத்த பின்னர் நீதிமன்றத்தில் தனது தனிமனித உரிமையில் லைசென்ஸ் வழங்கும் அதிகாரி குறுக்கிட்டதாக அவதூறு வழக்கு தொடர்ந்துள்ளார்.

## புராதன கால பரிமாற்றம்

EEG headsets என்ற சாதனம் ஒன்றின் உதவியால் ஒருவர் மனதில் நினைக்கும் செய்திகள் மின் அலைகள் மூலம் பைனரியாக மாற்றப்பட்டு அனுப்பபடுகின்றன, இந்த செய்தி 5000 மைல்கள் தொலைவில் உள்ள மற்றொருவரின் மூளையில் சென்றடைந்து பின்னர் அந்த பைனரி செய்தி எழுத்து வடிவில் கம்ப்யூட்டர் உதவியால் மாற்றப்படுகிறது.




## தன் கையே எமனானது

தாய்லாந்தின் சூரின் மாகாணத்தை சேர்ந்த Samaksamam - 59 வயதான பெண் சுமார் 50 வருடங்களாக மிகப்பெரிய கைகளை வைத்து கொண்டு அவதிப்பட்டு வந்துள்ளார். இவர் கைகள் அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இவருடைய கை 9.50 கிலோ என்பதால், எந்தவிதமான வேலைகளையும் செய்ய



முடியாமல் சிரமத்திற்கு ஆளாகியுள்ளார். தனது நிலைமையை கண்டு எவரும் கேலி செய்யக்கூடாது என்பதற்காக 20 வயது வரை தனது வீட்டிலேயே அடைந்து கிடந்துள்ளார். ஆனால் தற்போது தனது வயதான பெற்றோர்களை பார்த்து கொள்வதற்காக இவர் வெளியுலகிற்கு வந்து ஒரு மளிகை கடை வைத்து நடத்தி வருகின்றார்.

## பணமிருந்தால் தாயையும் வாங்கலாம்



அதாவது குயாங்கானை சேர்ந்த 30 வயது நபர் ஒருவர் இணையதளத்தில் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளார். அதில் தான் ஒரு பெண்ணை தாயாக தத்தெடுக்க விரும்புவதாக கூறியுள்ளார். அந்த பெண் 57 வயது இருக்க வேண்டும். அவருக்கு நல்ல கல்வி அறிவு இருக்க வேண்டும். போதை பொருள் பயன்படுத்துபவராக இருக்க கூடாது. தனக்கு தாயாக இருக்க அவருக்கு ரூ. 1 கோடி பணம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி தொடர்கதை

பாதசாரி

எனக்குத் தெரிந்த காசி எட்டு வருஷங்களா அப்பயே தான் இருக்கிறான். கர்ப்பம் விட்டு வெளியேறிய பின் அவனுடைய நினைவுப் பாதையில் முதலடி பற்றி ஒரு முறை காசி சொன்னான். அவன் அம்மா இறந்து ஆறாவது மாதமோ, வெய்யிலில் கற்றாழை அடர்ந்து சூழ்ந்த ஒரு வறட்டு இட்டேறி வழியே பாட்டியின் இடுப்பில் கதறிக் கொண்டு வருகிறான் காசி. அவனது பெரியப்பா வீட்டு வாசலில் கொண்டு வந்து இறக்கிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் போகிறாள் ஒரு வெள்ளைச்சீலைக் கிழவி. அது காசியின் அம்மாவைப் பெற்ற அம்மா. மாமன்மாரின் பகல் தூக்கத்தைக் கலைத்து குழந்தை அழுதால் யாரால் தான் சகிக்க முடியும்.

காலேஜ் பருவத்தில் தான் காசி எனக்கு நட்பானான். ஹிப்பாக்ரசி யை அம்பலப்படுத்தி மனிதர்களை, எங்களை பரிகசித்துக்கொண்டு கில்லாடிகளாக உணர்ந்து குதூகலித்துத் திரிந்த எங்கள் நட்பு புத்தகங்கள் மூலம் பலப்பட்டது. வித்தியாசமானவர்களாக மாற்றிமாற்றி மெச்சிக் கொண்டு நடந்தோம். ஆதவனை ரசித்துப் படித்தோம். இடையில் நான் படிப்பதில் ஏனோ தேங்கிப் போனேன். அரசாங்க வேலை கிடைத்து போன பின்தான் காசியின் நெருக்கத்தை இழந்துவிட்டேன். ஆவேசமாகப் பாய்ந்து அரைக் கிணறு தாண்டும் சுபாவம் சிறுவயதிலிருந்தே காசிக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவனுடைய பள்ளி வாழ்க்கையைப் பற்றி அதிகம் அவன் சொன்னதில்லை.

நான்காம் வகுப்பு படிக்கும்போது காதலில் தோல்வி என்றும், ஹைஸ்கூலில் பிரேயரின் போது காலையில், கனிகள் அல்லது ஐசக் நியூட்டன் பற்றி கட்டுரை படித்து ஸ்கூலையே அறுப்பான் என்றும் ஏதோ சொல்லியிருக்கிறான். எஸ்.எஸ்.எல்.சி யில் மிக அதிக மார்க்குகள் வாங்கினான். என்பது எனக்குத் தெரிந்தது.

கொஞ்ச நாட்கள் தெலுங்கு படிக்கப்போவதாக கூறி தெலுங்கு வீட்டுப் பெண் ஒவ்வொரு நாளும் காபியில் கொஞ்சம் காதலையும் சேர்த்துக் கொடுத்தாள்.

காலேஜில் அவனுக்குப் பிடித்தவை இரண்டே தான் ஒன்று கவிதை இன்னொன்று விளையாட்டு.

எந்த ஒரு வேலையிலும் நிலைத்து நிற்பதில்லை. எங்கு வேலைக்குப் போனாலும் அங்கு காதல் வயப்பட்டு பின் பிரச்சினையாகி நின்றுவிடுவான்.



திருநாளன்று தான் மொட்டை போடப் போவதாகக் கூறி அப்பாவிடம் காசு வாங்கி வந்து என்னுடன் இரண்டு நாட்கள் சந்தோசமாக இருந்துவிட்டு ஒரு நாள் திடீரென மொட்டை போட்டுக் கொண்டு வந்து, மத்தியானம் இருவரும் பியர் எடுத்துவிட்டு லாட்ஸில் தூங்கினோம்.

பின்னர் சாயங்காலம் காற்றாட வெளியே நடந்த போது ஒரு திடுக்கிடும் உண்மையைக் கக்கினான். உண்மையிலேயே நான் ஒரு பாவிடா குணா.

அன்பான அப்பாவை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு வேலைக்குப் போக பிடிக்கவில்லைடா.

தினம் தினம் ஒரே நேரத்தில அதச் செய்யறது, டைமுக்கு சாப்பாடு, டைம்முக்கு குளியல்..... என்னால முடியல்லடா குணா!

படுபாவி!

எனக்கு உள்ளூர சத்தியமான ஆசை என்ன தெரியுமா?

சொல்லு

எங்காவது காட்டுக்குள்ள மலைப்பக்கம் ஓடிப் போயிடணும்!

போயி!

போயி,

ஆதிவாசிகளோட ஆதிவாசியாகனும்.

முட்டாள் அங்க மட்டும் பொறுப்பு இருக்காதா என்ன?

காசி பேசவில்லை.

திடீரென சட்டையைக் கழற்றினான். தோள்பட்டை விறைத்துப் பலகை மாதிரி இருந்தது. பார்த்ததும் அவனைக் கூட்டிக்கொண்டு லாட்ஜிக்கே வந்துட்டன்.

இரவு பதினொரு மணி விழித்துக் கொண்டான். இரவு உணவு சாப்பிடவில்லை. தோளைத் தொட்டு பரிவாக அருகில் அமர்ந்தேன்.

எதிர்பார்க்கவில்லை. பெருங்குரலெடுத்து அழத் தொடங்கினான். எனக்கு எரிச்சலாகவும், பயமாகவும் இருந்தது. பக்கத்து அறையினர் வந்துவிடுவார்களோ என்றளவுக்கு கத்தி அழுதான். அரைமணி நேரமாகியது.

பின்னர் உறங்கிவிட்டான்.

நல்லாத் தூங்கினியா?

ம்... ம்

பெரியம்மாட வீட்டில காசிக்கு நிலமை முற்றிக்கொண்டு வந்தது. மனநோயாளி போல் நடித்துத் திரிந்த அவனுக்கு மெய்யாகவே லேசாக மனநோய் தாக்கியது.

ஒரு வினாடி கூட காசியால் காலூன்ற முடியவில்லை.



திடீரென ஒரு நாள் ஒரு சாயங்காலம் எங்கோ சென்று விட்டு கிராமத் தோட்டத்திற்கு வந்தானாம். உடம்பு ஊதிக் கறுத்து ஆள் பயங்கரமாக இருந்தான். இரண்டாவது நாள் நச்சரிக்க ஆரம்பித்து விட்டான். கல்யாணம் செய்யணும் என்று.

நான் செய்வதறியாது காசியை ஒரு சாமியாரிடம் அழைத்துப் போனேன். தியானம் கத்துக்கச் சொன்னார். எவ்வளவோ புரிய வைத்தும் அவரால் அவனை தன் வழிப் படுத்த முடியவில்லை.

சாமி ஒரே வரியில் காசிக்கு சொன்னார். காசி! உனக்கு வேறெந்தப் பிரச்சினையும் இல்லை. உனக்கு செக்ஸ் தான் பிரச்சினை என்றார்.

காசி இரண்டு நாட்களாக குழப்பத்தில் என்ன செய்வதென்று தெரியாமல் சுற்றித் திரிந்தான். பின் ஒரு வழியாக முடிவு சொன்னான். தான் வேண்டுவது தாயான பெண் என்று ஏதொ உளறினான்.

பின் என்னைத் தனியாக கூப்பிட்டு இனிமேல் குணாவை என் ஆச்சிரமத்திற்கு கூட்டி வர வேண்டாம் என்று முடிவாக சொன்னார் சாமியார்.

காசி கல்யாணம் முடித்து ஒரு வருடம் கூட வாழவில்லை. இரண்டாவது மாதம் ஒரு நாள் மாலையில் கிராமத்து தோட்டத்து வாசலில் வந்து நின்றான். நாமிருவரும் தான் நின்றிருந்தோம்.

அடுத்தவாரம் தொடரும்.. .. ..

# இதயத்தை சுட்டது

அதிகாலை ஐந்து மணியிருக்கும். இராமாயி தன்னோட புருஷ்ன் வேலனைத்தட்டி எழுப்பினாள். " ஏய்... ஏய்... எந்திரியா... இன்னும் தூங்கிட்டிருக்கிற. சட்டுபுட்டுன்னு எந்திரிச்சோம், காலவாசப் பக்கம் போயி, மண்ண கொலச்சுப் போட்டோமுன்னு இல்லாம,.. எந்திரியா" வேலன் முந்திய நாள் செஞ்ச வேலையினால உடம்பு கலச்சுப் போயிருந்தான். அசந்து தூங்கிக் கொண்டிருந்த அவன், இராமாயி போட்ட சத்தத்துல உடலை முறுக்கிக்கொண்டே மெதுவாக எழுந்தான். பக்கத்துல உள்ள கொடத்துல தண்ணிய அள்ளி மூஞ்சியக் கழுவிக்கொண்டான். மண்வெட்டியை எடுத்து தோளில் வைத்துக் கொண்டு காலவாசலுக்குப் புறப்பட்டான்.

வேலன் மாங்கு மாங்குனு மண்ணை வெட்டி போட்டான். காலையில லேசாக குளிர் இருந்தாலும், அவனோட உடல் பூராவும் வியர்த்திருந்தது. அன்றைக்கு எவ்வளவு செங்கல் அறுக்க முடியுமோ அந்த அளவுக்கு மண்ணை வெட்டி, தண்ணி ஊற்றி கொலச்சுப் போட்டான். கிழக்கே சூரியன் உதித்துக் கொண்டிருந்தான். ஆனால் வேலவனுடைய வாழ்வில் புதிய உதயமே இல்லாததால், தினந்தோறும் உதிக்கும் சூரியன் அவனுக்கு எந்த அர்த்தத்தையும் தரவில்லை.

இராமாயி வேகவேகமாய் சமயல் வேலையை முடித்துக்கொண்டிருந்தாள். அம்மியில் தொட்டுக் கொள்வதற்கு தொவயல் அரைத்துக் கொண்டே "டேய்... டேய்... முத்து சீக்கிரம் கிளம்பு. பள்ளிக்கூடம் போக நேரமாச்சுள்ள" அக்கறையோடு தன்னுடைய ஒரே மகனைக் கூப்பிட்டாள். முத்துவுக்கு படிப்பில் கொஞ்சம் ஆர்வம் இருந்தது. இந்த வருடம் ஏழாம் வகுப்பு முடித்து எட்டாவதுக்குச் செல்கிறான். "அம்மா ஸ்கூல் தொடங்கி இரண்டு வாரம் ஆவுது. இன்னும் யூனிபார்ம், புஸ்தகமெல்லாம் வாங்கல... அப்பாக்கிட்ட சொல்லுமா" முத்து நச்சரித்தான். " சரி... சரி... இப்போ நீ பள்ளிக்கூடத்துக்கு போ, நான் கொப்பன்கிட்ட சொல்லி வழக்கம்போல் காலவாசல் முதலாளி கிட்ட கொஞ்சம் கடன் கேட்கச் சொல்றேன்" இராமாயி அவனை அனுப்பிவிட்டு, புருசனுக்கு கஞ்சி எடுத்துகிட்டு காலவாசலுக்கு புறப்பட்டாள்.

மண்ணை கொலச்சுப் போட்டவுடன், வேலன் செங்கல் அறுக்க வேண்டிய இடத்தை சுத்தம் செய்தான். ஓர் இடத்துல கொலச்சுப் போட்டுக்கிடக்கிற மண்ணை, செங்கல் அறுக்கத் தோதுவா பக்கத்துல அள்ளிப்போட்டான். கட்டையை எடுத்து இரண்டு செங்கலா, வரிசையா அறுக்க ஆரம்பித்தான். ஒரு நாளைக்கு ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு செங்கல்தான் இரண்டு பேரும் சேர்ந்து அறுக்க முடியும். ஆயிரம் செங்கலுக்கு நூறு 'ரூபா கூலி.

இராமாயி கஞ்சியைக் கொண்டுவந்து இறக்கி வைத்தாள். சூரியன் உ'ணத்தைக் கக்கிக் கொண்டிருந்தான். " இந்தாய்யா... வந்து கஞ்சியக் குடிச்சிட்டுப் போயி வேலையைச் செய் " அவள் அக்கறையோடு புருசனைக் கூப்பிட்டாள். " கொஞ்சம் பொறுடி இன்னும் இரண்டு வரிசைக்கல் அறுத்துட்டு கஞ்சிக் குடிக்கிறேன் ", குனிந்துகொண்டே பேசினான்.

இராமாயி, உடனே கஞ்சியை காக்கா வந்து கொத்தாம நல்லா மூடிவச்சுட்டு புருசனுக்கு இணையா அவளும் மண்ணை அள்ளி செங்கல் அறுக்க ஆரம்பித்தாள். இரண்டு வரிசை வேகவேகமாக கல்லு அறுத்த பிறகு". சரி வாடி, கஞ்சியக் குடிச்சிட்டு வரலாம்." வேலன் கூப்பிட்டான். கையை நல்லா கழுவிட்டு இரண்டுபேரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"வெயிலு ஏறிக்கிட்டிருக்கு வா... வா... கல்ல அறுத்துப் போட்டுட்டு அப்புறம் சாவகாசமா உட்காரலாம்" என்றவாறே வேகமாகச் சாப்பிட்டு வேலன் கையைக் கழுவினான். மீண்டும் இருவரும் வேலை செய்ய ஆரம்பித்தனர். கடும் வெயில் அவர்களை வாட்டியது. வேலனின் உடம்பை வியர்வைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

"ஏய்யா", "நம்ம முத்து புதுசா எட்டாவதுக்குப் போயி இரண்டு வாரம் ஆவுது. ஒரு புதுச்சட்டை வாங்கல... புஸ்தகம் வாங்கல...". புலம்பினாள். இராமாயி "ம்... புரியுது... புரியுது, இன்னைக்கு சாயந்தரம் முதலாளியப் பார்த்து ஐநூறு 'ரூபாய் கடன் கேட்கிறேன்" என்றான் வேலன். கொலச்சிப் போட்ட மண்ணையெல்லாம் செங்கல்லா அறுத்துப்போட மணி ஒன்னாகிவிட்டது, சரியா ஆயிரத்து ஐநூறு கல்லு அறுத்து முடித்தனர். கைகால் முகம் கழுவிக்கொண்டு புளியமரத்தடிக்கு வந்தனர். " பசிக்குதடி... சீக்கிரம் கஞ்சியிருந்தா ஊத்து " வேலன் பசியோடு பேசினான். இருவரும் அமர்ந்து கஞ்சி குடித்தார்கள்.

புளியமரத்தடி நிழல் ரொம்ப அருமையாக இருந்தது. வேலை செய்து களைப்பில், அங்கேயே அசந்து தூங்கினர். வெயில் மூஞ்சியில் அடித்தவுடன் கண்விழித்துக் கொண்ட இராமாயி, "இந்தாய்யா பொழுது சாயப்போவுது எந்திரிய்யா... வேலனைத் தட்டி எழுப்பினாள்.

அவசராமாக எழுந்து கண்ணைத் துடைத்தான். "சரி நான் முதலாளிகிட்ட போயி கடன் கேட்டுட்டு வாறேன், நீ போயி குடிசையில கஞ்சியக் காச்சு" சொல்லிக் கொண்டே அவன் நடக்க ஆரம்பித்தான்.

"வாடா... வேலா என்னா விசயம்? இன்னைக்கு கல்லு அறுத்தாச்சா"? முதலாளி வேலனை விசாரித்தார். முதலாளியைப் பார்த்தவுடன் துண்டை எடுத்து கையில் போட்ட வேலன், "ஆமாயா காலவாசலேர்ந்துதான் வர்றேன்", பணிவுடன் பேசினான்.

"ஐயா என்னுடைய பையனுக்கு புஸ்தகம், சட்டை துணிமணியெல்லாம் வாங்குறதுக்கு ஐநூறு 'ரூபா பணம் வேணும். "... வேலன் தயவுடன் கேட்டான். பணம் என்றவுடன் தன்னுடைய தொனியை மாற்றிக் கொண்ட முதலாளி, " இந்தா பாரு ஏற்கனவே நீ கட்ட வேண்டிய நாலாயிரத்துக்கு வட்டி ஏறிக்கிட்டே போவுது. அதவேற கட்டி முடிக்கல. அதுக்கு முன்னால இன்னும் கடனா கேக்குற, போயிட்டு நாளைக்கு வா பேசிக்கலாம்" என்று எரிச்சலுடன் பேசினார். மனதில் கோபத்துடனும் தன் வாடிய முகத்தோடும் வேலன் குடிசைக்குத் திரும்பி வந்தான்.

சாயந்திரநேரம். வெளியே லேசாக இருட்டி இருந்தது. பிள்ளைகள் குடிசை ஓரம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வேலன் மெதுவாகக் குனிந்து குடிசையில் நுழைந்தான். இராமாயி சமயல் வேலையை முடித்து விட்டு சாப்பிட தயாராய் இருந்தாள். அப்பா வந்ததைப் பார்த்து முத்து ஓடிவந்தான். கைகால் முகம் கழுவிக் கொண்டு அவனும் சாப்பிடத் தயாரானான். மூவரும் சாப்பிடும்போது, "நாளைக்கு புஸ்தகமெல்லாம் வாங்கித் தருவீங்களா"? முத்து ஏக்கத்தோடு கேட்டான். "டேய், முதல்ல சாப்பிட்டுப் போயி படு. எல்லாம் பிறகு பாத்துக்கலாம், " வேலன் அதட்டினான்.

சாப்பிட்டு முடித்தவுடன் மூவரும் பாயை விரித்துப் படுத்தனர். வழக்கத்துக்கு மாறாக, வேலன் ஒன்றும் பேசாதிருந்தான். முதலாளி சொன்ன பதில் அவனை அமைதியாக்கிவிட்டது. இராமாயி வேலனுடைய முகத்தைப் பார்த்து பணம் கிடைக்கவில்லையென்று தெரிந்துகொண்டாள். "அப்பா, நாம வருசம், முழுவதும் செங்கல் அறுக்கிறோம். எத்தனையோ பேரு செங்கல் வாங்கிட்டுப்போயி வீடு கட்றாங்க. நம்ம வீடு மட்டும் ஏம்ப்பா வெறும் மண் குடிசையா நிக்குது?"

பதில் சொல்லத் தெரியாத வேலன், "டேய் பேசாமப் படுத்துத் தூங்குடா, பெரிய மனுசன் மாதிரி பேசுற" முத்துவை அதட்டினான். கொஞ்ச நேரம் கழித்து முத்துவும் இராமாயியும் தூங்கி விட்டனர். வேலனால், தூங்க முடியவில்லை. முத்து கேட்ட கேள்வி அவனுடைய இதயத்தைக் குத்திக் கொண்டிருந்தது.

வேலனுக்கு அடுத்த நாள் வழக்கமான செங்கல் அறுக்கும் வேலை கிடையாது. அறுத்த செங்கலை சூளையில் வைத்து தீப்போடுகிற வேலை. செங்கலுக்கு இடையே கட்டைகளை அடுக்கி விட்டு, தீப்போட ஆரம்பித்தான். அங்கே எரிந்த நெருப்பு செங்கலை மட்டுமல்ல, வேலனுடைய இதயத்தையும் சுட்டது.

நன்றி - தமிழ் கூடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## புதுப்பொலிவாய் வந்தாள்



மாவடுக் கண்ணும்
மலர் பூத்த வதனமும்
நாவினிக்கும் பேச்சும்
நளினமான நடையும்
சீவி முடித்த குழலும்
செவ்வந்தி மணமும்
சிரித்த முல்லைப் பல்லும்
சிற்றுடுக்கையிடையும்
குவிந்த தனமழகும்
கொவ்வைக் கனியிதழும்
பூவைக் அவள் பூத்த
புதுப்பொலிவாய் வந்தாள்
பாவை அவள் பார்வை
என்னை பந்தாடி போச்சு!

– சேனையூரான் –

## ஒவ்வொரு வரிகளும் உனக்கே சொந்தம்

ஆயிரம் இதயம் உள்ளன
நேசிக்கலாம்
ஆயிரம் இதத்தை
நீ நேசிக்கலாம்
ஆனால்,
நான் உன்னை நேசிப்பது போல்
எந்த இதயமும்
உன்னை நேசிக்காது

உன்னை காணும் முன்
என் நினைவில் யாரும் இல்லை
உன்னை கண்ட பின்
என் நினைவே
என்னிடம் இல்லை...



- சந்திபவி -

## "நான்"

... மாயன் ...

என் ஜனன விதைகளில்
அடைந்து போயிருக்கிறது
அழுக்கு

ஓடும் மீன் ஓடி
உறு மீன் வரும்வரைக்
காத்திருக்கின்றேன் – நான்
களங்கமுற்ற கொக்காய்

என்னுள்
ஆசை விதைகளை
ஆலமாய் வளர்த்தி
விழுதுகளையும் வீழ்த்தியது
காமம்

பெண்ணே
என்னின் விழுதுகளை
ஒறுப்பதாயிருந்தால் விரும்பு
அல்லாவிடில்

நீயும் உறுமீனாய்.. .. ..
என் காத்திருப்புக்கள் தொடரும்.

## உண்டா???

வேந்தர்க்குப் பலமனைகள்,
வேண்டுவது முடிமரபாம்!
மாந்தர் அவர் வாழ்வை,
மதித்தே மகிழ்வோமா?

அன்னார் பல பிரிவார்,
அதிலமூன்று முக்கியமாம்!
மன்னர் குறு நிலத்தார்,
மகிழ வழி உளதா?

ஆளுக்காள் போர்வீரம்,
அதிகமாம் போர்க்களங்கள்!
தோழமையும் பகையாகும்,
சொல்வதுவா மகிழ்வென்று?

ஆரியப் புல்-நூல் வெல்லும்,
அதிவலிய வாள் - வேலை!
காரியத்தில் கண் இல்லை,
களி கொள்ள முடிகிறதா?

வேள்விப்புகை - நெருப்பு,
வேண்டியதா வெற்றிபெற?
பாழ் ஆச்சு தமிழ் கலப்பால்,
பாராட்ட முடிகிறதா?

இந் ததிலும் பல பிரிவாம்,
ஏற்றாலோ பூண்நூலே!
இந்த வரலாற்றால்,
எந்தமிழர் மகிழ்வதுவா?

கழகச்சிலநூலும்,
கருத்தார் திருக்குறளும்
பழகுதொல் காப்பியமும்,
பாரா மகிழ்வுளதா?

தமிழர்வரலாற்றில்,
தற்பெருமைக்கிடமுண்டா?
அமுத மொழி ஆட்சி,
அமைந்த பழநாடுண்டா?

– தாமரைத்தீவான்–
[கூச்சந்தீவு, கிண்ணியா]

## தாயிடமிருந்து மகளுக்கு...

எனதருமை மகளே
வெட்கப்படாமல் சொல்
நானே உனது தாய் என்றும்
இந்த நகரமே உனது தந்தை என்றும்

கற்பிலுயர்ந்த மனைவியரிடம் போய்ச் சொல்
நானே அவர்களின் ஆண் மக்களுக்குக்
காதலைக் கற்றுத் தருகிறேன்
ஆயிரம் பெண்களுக்கீடாய் என்னையே
அவர்களிடம் சமர்ப்பித்தேன்
அங்ஙனம்தான் நானொரு துறவியானேன்
ஆண் என்பவன் என் மகளே
முடிவற்ற ஆசையின் பேருரு
அந்த ஆழியினை நீ கடந்தேக வேண்டும்
நான் எவ்வாறு என் உடலைக்
கடந்தேனோ அது போல

தலையை நிமிர்த்து
எனதான இடத்தினை நீ நிரப்பு
உன்னதமானவளாய் உயர்வு பெறு
நாளை அதிரசம் ததும்பும் காதலனுபவம் உனக்குக்
கிட்டலாம்
அப்போது நான் காணமுடியாது போன சூரியனை
நீ காண்பாய்
யேசுபிரான் முன்னே நின்று நான் கண்ணீர்
விடவில்லை
என்முன்னே வந்து கண்ணீர் விடும் உபகுப்தனும்
வேண்டாம்

ஒவ்வோர் இரவும் நான் எரிந்து கனியும் இரும்பு
ஒவ்வோர் காலையும் சுடர்விடும் பொன்
காமத்தை நான் வென்றேன் பேராசைச் சுயநலத்தை
நீ
தாண்ட வேண்டும்
நாமே தான் நிறைந்து தளும்பும் பூமி
என்றும் கொடுக்கும் இயற்கை.




# கொட்டியாபுரத்து சிங்கம்

சம்பூர் சதீஸின்

கொட்டியாபுரம்
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

கடந்த வார தொடர்ச்சி .. ..

சேனரத் மன்னனும், குமாரசிங்கனும் தங்கள் படைகளுக்குத் தேவையான உணவுகள் முதலான வசதிகளை கவனித்துச் செயற்படலாயினர்.

இனி .. ..

கண்டியிலிருந்து புறப்பட முன்னரே ஏறத்தாழ நூற்றைம்பது பேரைக் கொண்ட உப படையணியை விஜயகோன் பண்டார என்னும் தன் உறவினன் தலைமையில், மெனிக்கடவர விலிருந்து வருகின்ற டீ சா தலைமையிலான படைகளை, பதுளைக்கு வரும் வழியில் மறைந்திருந்து சிறு சிறு இழப்புக்களை ஏற்படுத்திப் பின்வாங்கும் திட்டமொன்றையும் வகுத்திருந்தான்.

இவ்வாறு சிறுகச்சிறுக சேதங்களை விளைவிப்பதன் மூலம் பறங்கிப்படைகளின் மனோதிடத்தைக் குறைக்கலாம் என்றும், தற்போதய மலைநாட்டு சீதோஸ்ண நிலை பறங்கியருக்கு ஒத்து வராமல் இருக்கக் கூடுமாதலால் அவர்களின் படை நகர்த்தல் பெரும்பாலும் தாமதப்படலாம் என்றும் திட்டம் தீட்டினான். இத்திட்டம் ஓரளவு கண்டியரனுக்குக் கைகொடுத்தது என்றே கூறலாம்.

மெதுவான படைநடவடிக்கையை மேற்கொண்டு வந்த பறங்கிப் படைகளுக்கு சுதேசியப் படைகள் மறைந்திருந்து வில் அம்புகளால் தாக்குவதும், மலைக்கணவாய்களினூடாக பாரிய கற்களை உருட்டி சேதமேற்படுத்துவதும் பெருமரங்களை வெட்டி வழியில் பீரங்கிகளுக்குத் தடைகளை யேற்படுத்துவதுமாக பல்வேறு சிரமங்களைக் கொடுத்தனர். இவற்றையெல்லாம் எதிர்கொண்டு பதினெட்டு நாட்களில் டீ சா பதுளையை அடைந்தான். அவனுடைய படைகளும் வருகின்ற வழியில் கிராமங்களிற்கு தீமூட்டியும், அவற்றைச் சூறையாடியும், பெண்கள் முதியவர்களை கொலை செய்வித்தும், கோவில்கள், விகாரைகளைச் சேதப்படுத்தியவாறும் பல வகையான தீங்குகளை இழைத்துக் கொண்டே வந்தனர். இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கொடும் பாதகச் செயல்களில் பெரும் சிறப்புடன் மைய நகரமாகக் காணப்பட்ட



பதுளை நகரும், கதிர்காமக் கோயிலும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. தளபதி டீ சா தனது தலைமைக் காரியாலயமாக முதியங்கண விகாரையில் பாசறையமைத்து தனது உபதளபதிகளுடன் இனிமேல் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களைத் தீட்டினான்.

ஏறத்தாழ ஆளனி வளத்தில் சமனிலை கொண்ட பறங்கிப் படையை அவதானித்த செனரத் மன்னன், மாத்தளைப் படையணியை உதவிக்கு வருமாறு அழைப்பை அனுப்பி விட்டு மறுநாள் காலையில் பெலிகல் ஓயாவை கடக்க முற்படும் பறங்கிப் படையணியுடன் போரிடலானான். முதல் நாள் போரில் சுதேசிப் படைகளின் கரந்தடிப் போர் முறைக்கு பறங்கியர் தரப்பில் அதிகளவிலான இழப்புகள் ஏற்பட்ட போதும் அவர்கள் மூங்கில் தடிகளை அணைத்து மாவலி ஆற்றைக் கடப்பதிலேயே குறியாகவிருந்து அதில் வெற்றியும் கொண்டனர்.

அன்றிரவு வந்து சேர்ந்த மாத்தளைப் படையணியால் கண்டியப் படைகளின் மத்தியில் புது உற்சாகம் காணப்பட்டது. அன்றிரவு நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் டீ சாவின் படைபலம் பற்றி ஆராயப்பட்டது. இயலுமானவரை அவர்களுடன் மலைப்பகுதியில் வைத்து சண்டை செய்வதே நன்மை பயக்கும் என மந்திரி தெரிவித்ததை ஆமோதித்த அரசன் அவ்வாறாயின் மேலும் பல மைல்கள் பின்னோக்கிச் செல்ல வேண்டும் என்றும் கூறினான்.

முடிவாக நான்கு கோறளையிலுள்ள படைத்தலைவனுக்கு இரகசிச் செய்தியனுப்பி கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களில் உள்நாட்டு கலகங்களை ஏற்படுத்துவது என்றும், இராஜசிங்கனை படையணிகளுடன் கொழும்பு செல்லும் பாதையில் உள்ள ரன்டெனிவல வுக்கு வருமாறும் செய்தியனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டு அதன் படி ஒற்றர்கள் மூலம் தகவல் அனுப்பப்பட்டது.

இவ்வாறு இரண்டு நாட்கள் தொடர்ச்சியான பலத்த சண்டை இடம்பெற்றது. இரு புறத்திலும் பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. முதலிரு நாள் சண்டையில் ஆதிக்கமேற்படுத்தியிருந்த பறங்கிப் படைகள் மூன்றாம் நாளில் சரிவை சந்திக்கத் தொடங்கினர். பின்வாங்கிச் சென்ற டீ சாவின் படைகள் கொழும்பிலிருந்து வந்திருந்த பீரங்கிகள் கொண்ட பறங்கிப் படைவீரர்களின் வரவால் புது உற்சாகம் பெற்று கடும் சண்டையிலீடுபட தயாராகின.



ரன்டெனிவலவில் தங்கியிருந்து தாக்குதலை மேற்கொள்ள தயாராகியிருந்த வேளை இழப்புகளுடன் முன்னேறி வந்த கண்டியப்படைகள் அங்கே இடையில் முகாமிட்டிருந்த இராஜசிங்கன் தலைமையிலான படைகளுடன் இணைந்து கொண்டன. கூறப்போனால் அன்றைய தினம் இரு தரப்புமே உற்சாகமடைந்திருந்தன. தங்கள் தரப்புக்குத் தான் வெற்றி என கண்டிப் படைகள் எக்காளமிட்டுக் கொண்டிருந்ததற்கு மகாவீரன் என்று கண்டி மக்களால் புகழப்படும் இராஜசிங்கனுடைய வரவும். புரவிப்படை வீரன் என்று கண்டிய வீரர்களால் இனங்காணப்பட்டிருந்த இராஜசிங்கனுடைய வரவுமே காரணமாகும்.

... பாகம் 15
தொடரும் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஐ' முன்னணியில்



இவர்கள் கூட்டணியில் உருவான எந்திரன் படமே இன்று வரை வசூலில் நம்பர் 1 ஆக இருந்து வருகிறது. இதை தொடர்ந்து தன் சாதனையை தானே முறியடிக்க 'ங்கர் தன் அடுத்த படைப்பான 'ஐ' யை உருவாக்கிவிட்டார். இப்படத்தின் தெலுங்கு உரிமை 30 கோடி ரூபாய் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம். இது "எந்திரன்" படத்தின் டப்பிங் உரிமை விலையை விட 3 கோடி ரூபாய் அதிகமாம்.

## 'தல' வை யாருக்குத்தான் பிடிக்காது



அஜித்தின் புகழ் தமிழ் சினிமாவை தாண்டி பாலிவுட் வரை சென்றுவிட்டது. பாலிவுட் பிரபலம் ஒருவர் அஜித் பற்றி மனம் திறந்துள்ளார். ஹிந்தியில் அஜித்தை போலவே பைக் பிரியரான ஜான் ஆபிரகாம் சமீபத்தில் ஒரு கருத்தை கூறியுள்ளார். இதில் 'எனக்கு தமிழ் சினிமாவில் அஜித்தை மிகவும் பிடிக்கும், அவரை ஒரு முறையாவது நேரில் பார்க்கவேண்டும்' என்று தன் விருப்பத்தை தெரிவித்துள்ளார்.

## ஸ்ரேயா திடீர் திருமணம்



கடவுள் இருக்கின்றாரா? இல்லையா? என்கிற கருத்துடன் உள்ள கதையம்சம் கொண்டு சமீபத்தில் இந்தியில் வெளியான "ஓ மை காட்' என்ற படத்தின் தெலுங்கு ரீமேக்கில்தான் ஸ்ரேயா தற்போது நடித்துக்கொண்டு இருக்கின்றாராம்.

வெங்கடேஷ் ஜோடியாக நடிக்கும் ஸ்ரேயா, இந்த படத்தில் இதுவரை இல்லாத அளவில் கவர்ச்சி காட்டியுள்ளதாகவும், இந்த படம் வெளிவந்தபின்னர் தன்னுடைய மார்க்கெட் மீண்டும் விறுவிறுப்பு அடையும் என்றும் அவர் நம்பிக்கையுடன் கூறுகிறார்.

## இணையும் ஜீவா + துளசி



பிரபல ஒளிப்பதிவாளர் ரவி.கே.சந்திரன் முதன் முறையாக இயக்குனராக அறிமுகமாகும் படம் யான். இப்படத்தில் ஜீவா-துளசி நடிக்க ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.இப்படத்தின் ட்ரைலரை இரு தினங்களுக்கு முன் வெளிவந்து அனைவரையும் வெகுவாக கவர்ந்தது. தற்போது வரை இந்த ட்ரைலரை 2 லட்சத்திற்கு மேற்பட்டோர் பார்த்துள்ளனர்.மக்களின் வரவேற்பை கண்ட படக்குழு மிகவும் சந்தோஷத்தில் உள்ளது.

## உயிருக்குப் போராடும் நிலையில் சிவகார்த்திகேயன்



தற்போது 'டாணா' என்ற படத்தில் நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன். இதன் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. தற்போது இதன் படப்பிடிப்பு நார்வேயில் நடக்கிறது. சிவகார்த்திகேயனும், படக்குழுவினரும் அந்த நாட்டுக்கு சென்றனர். இந்த நிலையில் சிவகார்த்திகேயன் கார் விபத்தில் சிக்கி படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக செய்திகள் பரவியது. பத்திரிகை அலுவலகங்களுக்கு நிறைய பேர் போன் செய்து விசாரித்தனர். இது குறித்து சிவகார்த்திகேயன் 'நான் விபத்தில் சிக்கியதாக வதந்தி பரவி உள்ளது. நான் எந்த விபத்திலும் சிக்கவில்லை' என்று தெரிவித்துள்ளார்.

## தெரிந்தவற்றை கக்குவேன்



ஹிந்தி, தமிழ், தெலுங்கு என அனைத்து மொழிகளிலும் நடித்தவர் ஸ்வேதா பாசு. இவர் ஹிந்தியில் குழந்தை நட்சத்திரமாக நடித்த படத்திற்கு தேசிய விருது வாங்கியவர் என குறிப்பிடத்தக்கது.சமீபத்தில் விபச்சார வழக்கில் கைதான இவர் பல அதிர்ச்சி தரும் தகவலை அளித்துள்ளார். இதில் இவர் கூறுகையில் 'பண நெருக்கடியில் தான் நான் இந்த தொழிலுக்கு வந்தேன். ஆனால் என்னை போல் பல கதாநாயகிகள் இதில் ஈடுபட்டுள்ளனர்' என்று கூறியுள்ளார். அவர்கள் பெயரை விசாரணையின் போது கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## லிங்கு கைதாகுவாரா!!

அரண்மனை படத்தை முடித்த கையோடு அடுத்த படத்தின் கதையயை தயார் செய்துவிட்டார் சுந்தர் சி. இந்த படத்தில் ஹீரோவாக விஷால் நடிக்கிறார். மேலும் அவரே இந்த படத்தையும் தயாரிக்கின்றார் என்றும் கூறப்படுகிறது. "ஆம்பள" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கும் இந்த படத்தில் விஷாலுக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார்.

இந்நிலையில் "ஆம்பள" படத்தின் ஒரு முக்கிய குணசித்திர கதாபாத்திரத்தில் நடிக்க



நடிகை சிம்ரனை சுந்தர் சி அணுகிய போது அவர் நடிக்க மறுத்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சமீபத்தில் ஆஹா கல்யாணம் என்ற படத்தில் கெஸ்ட் ரோலில் நடித்திருந்த சிம்ரனை யாரும் கண்டுகொள்ளவில்லை என்றும், விமர்சனங்களில் கூட தனது நடிப்பை குறித்து யாரும் குறிப்பிடவில்லை என்றும் கூறிய சிம்ரன், இனி கெஸ்ட் ரோலில் நடிப்பதில்லை என்று கூறி சுந்தர் சியின் படத்தில் நடிக்க மறுத்துவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# சினிமுரசு

திரை விமர்சனம்

யுவராஸஜ்போஸின் **இரும்புக் குதிரை**



பைக் பிரியரான அதர்வா, நண்பன் ஒருவனுடன் நடத்திய போட்டியில் வென்றதால் நண்பனின் பைக்கை கைப்பற்றுகிறான். தனது அண்ணன் உயிராக நினைத்த பைக்கை இழந்த அதர்வா நண்பன் தற்கொலை செய்து கொள்கிறான். தம்பியின் சாவுக்கு காரணமான அதர்வாவை பழிதீர்க்க அவனை தேடி புறப்படுகிறார் வில்லன் ஜானி.

இந்நிலையில் பைக்கை வென்ற மகிழ்சியில் தனது தந்தையை பைக்கில் அழைத்து செல்லும்போது எதிர்பாராத விபத்தால் தந்தையை பறிகொடுக்கும் அதர்வா, இந்த பைக்கால்தான் இவ்வளவு விபரீதம் என நினைத்து பைக்கை விற்றுவிடுகிறார். பின்னர் பீட்சா கடை ஒன்றில் வேலைபார்த்து வருகிறார்.

இந்நிலையில் ப்ரியாஆனந்துடன் அதர்வாவுக்கு காதல் ஏற்படுகிறது. அதர்வாவை ஒரு பைக் வாங்கும்படி ப்ரியாஆனந்த் வற்புறுத்துகிறார். இருவரும் சேர்ந்து பைக்கை வாங்க முயற்சிக்கும் போதுதான் வேண்டாம் என்று வெறுத்து ஒதுக்கிய பைக்கினை வாங்க ப்ரியாஆனந்த் கட்டாயப்படுத்துகிறார். வேறுவழியின்றி அதே பைக்கை வாங்கிக்கொண்டு ப்ரியாஆனந்தை அந்தபைக்கில் ஏற்றி செல்லும் போது வில்லன் ஜானி குறுக்கிட்டு இருவரையும் கடத்துகிறான். ஒரு இடத்தில் அதர்வாவை அடித்து போட்டுவிட்டு ப்ரியாஆனந்தை மட்டும் கடத்திக்கொண்டு செல்கிறான். காதலி ப்ரியாஆனந்தை அதர்வா எப்படி மீட்டார் என்பதுதான் க்ளைமாக்ஸ்.

இயக்குனர் யுவராஜ்போஸ் செய்த புத்திசாலித்தனமானகாரியம் ஒன்று படத்தை நிமிர்த்து விடுகிறது. அதுதான் கேரக்டருக்குரிய நடிகர்களை பொருத்தமாக தேர்வு செய்தது. பைக்ரேஸ் வீரராக அதர்வா, வில்லனாக ஜானி இருவரும் சரியான தேர்வு. ஆனாலும் பல இடங்களில் லாஜிக் இடிப்பது படத்திற்கு பெரியமைனஸ்.



ப்ரியாஆனந்த், லட்சுமிராய் இருவரும் கொடுத்த கதாபாத்திரத்தை மிகச்சரியாக பயன்படுத்தியுள்ளார்கள். சிறிதுநேரமே வந்தாலும் அலிஷாஅப்துல்லா மிகஅருமை.

லாஜிக் பல இடங்களில் ஓட்டையாக இருந்தாலும் இரும்புக்குதிரை நொண்டிக்குதிரை அல்ல..

## சினிமா குறுஞ் செய்திகள்



ஷங்கர் அவர்களின் பட லிஸ்டில் தெலுங்கு நடிகர் மகேஷ் பாபுவும் இணைந்துள்ளார். ஐ படத்தின் தெலுங்கு பதிப்பின் இசை வெளியீட்டு விழாவிற்கு மகேஷ் பாபுவிற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

ரோஜா, இவர் இயக்குனர் செல்வமணியை திருமணம் செய்துகொண்டு சினிமாவில் நடிப்பதற்கு முழுக்கு போட்டார். தற்போது முன்னணி தொலைக்காட்சி ஒன்றில் கேம் ஷோ ஒன்றை தொகுத்து வழங்குகிறார். இந்நிலையில் இவர் தன் கணவரை பிரிந்துவிட்டார் என்று வதந்திகள் பரவ, இதற்கு அவரே முற்று புள்ளி வைத்துள்ளார்.

நடிகர் ஆர்யா தன் தம்பி சத்யாவை ஹீரோவாக வைத்து தயாரித்துள்ள அமர காவியம் படம் வரும் வெள்ளிக்கிழமை வெளியாகிறது. படம் இன்னும் சில தினங்களில் வெளியாக உள்ளதை முன்னிட்டு படத்தை பார்த்துள்ளனர். படம் பார்த்த அனைவருமே ஒட்டுமொத்தமாக சொன்ன கருத்து, க்ளைமேக்ஸ், படம் பார்ப்பவர்களை உறைய வைக்கும் என்பதுதானாம்.

அஸித் வீட்டில் வெடிகுண்டு இருப்பதாக ஒரு மர்ம ஆசாமி சில நாட்களுக்கு முன் 108க்கு தகவல் அளித்ததை தொடர்ந்து போலிஸார் தீவிர விசாரணையில் அவரை கைது செய்தனர். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின்போது, தனது செல் போன் தொலைந்து விட்டதாகவும், அதை வைத்து யாரோ மிரட்டல் விடுத்துள்ளனர் என்றும் கூறினார்.

எதையாவது செய்து அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்துகிறவர் டாப்ஸி. ஆனால் அவரோ நான் ரொம்ப நல்ல பொண்ணு. அமைதியான பொண்ணு என்னை வதந்திகளால் வீழ்த்தப் பார்கிறார்கள் என்கிறார்.

நான் சுத்திவிட்டதும் என்னையே அவர் அடித்துவிட்டார். அவரது நகம் என் இடது கண்ணில் குத்தி ரத்தம் வழிந்தது. அதனால் தான் மருத்துவமனைக்கு சென்றேன்' என்று விளக்கம் அளித்துள்ளார் உதயநிதி. இதையே தற்கொலை முயற்சி என வதந்தியாக பரப்பிவிட்டனர்.

விஜய் நடிக்க இருக்கும் அடுத்த படத்தில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்ட நடிகை ஸ்ருதிஹாசன் படத்தில் இருந்து விலகிவிட்டதாக வதந்தி பரவிவருகின்றது.

சென்ற வருடம் நண்பர்களுக்காக விஜய் சேதுபதி நடித்து கொடுத்த ரம்மி, பண்ணையாரும் பத்மினியும் போன்ற படங்கள் தோல்வியடைந்து விட்டது. இதனால் இனி யாரிடமும் கதை கேட்பதில்லை, இருக்கிற படங்களை நன்றாக நடித்து கொடுத்தால் போதும் என்கிறாராம்.

பிசியாக நடித்து வரும் தனுஷ் தற்போது ஓஎல்எக்ஸ்இன் விளம்பர துாதராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆன் லைனில் பொருட்களை விற்க உதவும் இணைய தளமான ஓஎல்எக்ஸ் நிறுவனத்தின் விளம்பர படங்களில் தனுஷ் நடித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## சாதனையில் முகநூல்

தற்போது பில்லியன் கணக்கானவர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் சமூக வலைத்தளமான பேஸ்புக், மொபைல் அப்பிளிக்கேஷன்களை அறிமுகப்படுத்தியுள்ளமை தெரிந்த விடயமே. இந்நிலையில் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய மொபைல் சாதனங்களுக்காக உருவாக்கப்பட்டு Google Play Store தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அப்பிளிக்கேஷன் ஆனது தரவிறக்கத்தில் சாதனை படைத்துள்ளது. அதாவது இதுவரை 1 பில்லியன் தடவைகள் தரவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

## வளைந்த தொலைக்காட்சி



பிரபல சம்சுங் நிறுவனம் சில மாதங்களுக்கு முன்னர் வளைந்த மேற்பரப்பைக் கொண்ட தொலைக்காட்சியினை அறிமுகம் செய்திருந்தமை அறிந்த விடயமே. இந்நிலையில் தற்போது அவ்வகையான தொலைக்காட்சிகளுடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய வகையில் வளைந்த ஒலிப் பட்டியை (Soundbar) அறிமுகம் செய்துள்ளது. 8.1 சனல் உடையதும், இரு ஸ்பீக்கர்களைக் கொண்டதுமான இச்சாதனம் 42 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதாகவும், 4,200 மில்லி மீற்றர்கள் வளைவாரை உடையதாகவும் காணப்படுகின்றன. இதனை 55 மற்றும் 65 அங்குல அளவுடைய தொலைக்காட்சிகளில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## windows 9 — சிக்கலில்

சில தினங்களுக்கு முன்னர் Windows 9 இயங்குதளத்தினை மைக்ரோசொப்ட் நிறுவனம் எதிர்வரும் செப்டெம்பர் 30ம் திகதி அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தது. எனினும் இதுவரை மைக்ரோசொப்ட் நிறுவனம் உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும் வெளியிட்டிருக்கவில்லை. இது இவ்வாறிருக்கையில் சீனாவிலுள்ள மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் கிளையானது Weibo எனும் இணையத்தளத்தில் கீழே காணப்படும் படம் உட்பட, "Microsoft's latest OS Windows 9 is coming soon, do you think the start menu at the left bottom will make a come back?" எனும் கேள்வியையும் பயனர்களுக்காக விடுத்திருந்தது. ஆனால் இந்த தகவல்கள் தற்போது குறித்த இணையத்தளத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பெண் செய்தியாளர்

உலகிலேயே முதன்முதலாக தெளிவான உச்சரிப்புடன் செய்தி வாசிக்கும் பெண் ரோபோவை ஜப்பான் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். ஜப்பானைச் சேர்ந்த இஷ்கியுரோ என்ற விஞ்ஞானி தனது குழுவினருடன் சேர்ந்து ரோபோ ஒன்றை உருவாக்கினார். தற்போது டோக்கியோ தேசிய அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த ரோபோ பெண் உருவத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த ரோபோவை செய்தி வாசிக்க வைத்து விஞ்ஞானிகள் அசத்தினர்.



தற்போது, கோடோமொராய்டு என்ற குழந்தை ரோபோ ஒன்றையும் உருவாக்கியுள்ளனர். குழந்தை ரோபோ மழலை மொழியில் செய்திகள் வாசிக்கிறது. இந்த ரோபோக்களில் செய்திகளின் டேட்டாக்களை பதிவு செய்து விட்டால், அந்த ரோபோக்கள் தெளிவான உச்சரிப்பில் செய்திகள் வாசிக்கும்.

## எதையாவது விட்டுவையுங்களன்!

அப்பிள் நிறுவனத்தினால் வழங்கப் பட்டுவரும் ஒன்லைன் ஸ்டோரேஜ் சேவையான iCloud இல் காணப்பட்ட பிரபலங்களின் புகைப்படங்கள் ஹேக் செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. கடந்த வார இறுதி நாளில் நடிகை Jennifer Lawrence இன் கணக்கில் அவரால் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த சில புகைப்படங்கள் பல்வேறு இணையத்தளங்களில் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.
இதன் பின்னர் ஆராயப்பட்ட போது மேலும் சில பிரபலங்களின் கணக்குகள் ஹேக் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

## கூகுளின் டெலிவரி முயற்சி



இணைய உலகில் வேரூன்றிய போதிலும் தனது கிளைகளை பல்வேறு தொழில்நுட்ப திசைகளில் பரப்பி வரும் கூகுள் நிறுவனம் தற்போது மற்றுமொரு புதிய முயற்சியில் களமிறங்கியுள்ளது. புழழபடந ஓ என்ற திட்டத்தின் கீழ் Project Wing என பெயரிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்புதிய முயற்சியில் தானாகவே இயங்கக்கூடிய ட்ரோன் வகை விமானங்களை தயாரித்து வருகின்றது. இந்த விமானங்களைப் பயன்படுத்தி டெலிவரி சேவையை வழங்கவுள்ளதுடன், இதன் மூலம் பயனர்கள் 30 நிமிட நேரத்தினுள் ஒன்லைனில் கொள்வனவு செய்யும் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## கார்களின் டாக்டர்

தாம் பயன்படுத்தும் கார்களில் ஏற்படும் கோளாறுகளை கண்டறிவதை இலகுவாக்கும் பொருட்டு Fixd எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. கார்களில் பொருத்தப்படும் இச்சாதனம் Android மற்றும் iOS சாதனங்களுடன் புளூடூத் மூலமாக இணைப்பினை ஏற்படுத்தும் வசதியினைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக கார்களில் ஏற்படும் கோளாறுகளை இலகுவாகவும், விரைவாகவும் சுட்டிக்காட்டிவிடுகின்றது. இந்த சாதனமானது எதிர்வரும் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

## சூரியசக்தி விமானம்



சூரிய சக்தியில் இயங்கும் விமானம் ஒன்று அடுத்த ஆண்டு உலகைச் சுற்றி பறக்க விருக்கின்ற நிலையில், பரிசோதனை வெள்ளோட்டமாக சுவிட்சர்லாந்தில் அவ்விமானம் முதல் முறையாக பறக்கவிடப்பட்டுள்ளது. மாற்று ஆதார எரிசக்தியின் எல்லைகளை விரிவாக்க தாம் விரும்புவதாக இந்த விமானத்தின் விமானிகள் கூறுகின்றனர். கரிம இழைகளால் உருவாக்கப்பட்டுள்ள இந்த விமானத்தின் இறக்கைகள் போயிங் 747 ரக விமானத்தின் இறக்கைகளை விட அகலமானவை என்றாலும், இந்த விமானத்தின் எடையோ ஒப்பீட்டளவில் மிக மிகக் குறைவு.

## போலிகள் நீக்கம்

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது பயனாளர்களுக்கு உதவும் வகையில் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனமானது தனது இயங்குதளத்தினை பயன்படுத்தும் பயனர்கள் தேவையான மென்பொருட்களை இலகுவாக தரவிறக்கம் செய்யும் வசதியினை Windows Store தளத்தின் மூலம் வழங்கிவருகின்றது. இத்தளத்தில் காணப்பட்ட சுமார் 1500 வரையான போலி அப்பிளிக்கேஷன்களை மைக்ரோசொப்ட் நிறுவனம் தற்போது அதிரடியாக நீக்கியுள்ளது.

# ஒரு கொலையின் கதை

3-6 மாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

கடந்த வாரத் தொடர்ச்சி ..........

அடுத்த தொகுப்புக் குறிப்பு அலிகவினது கைத்தொலைபேசிக்கு மேற் குறித்த நேரத்தில் உள்வந்த அழைப்புக்களைப் பட்டியலிட்டிருந்தது..... அந்தப்பட்டியலில் இலண்டனில் இருந்து எடுக்கப்பட்ட அழைப்புக்கள் மற்றொறு நிறத்தால் தீட்டப்பட்டிருந்தன....

.............................................................. இனி இந்த வாரம்..

அந்தத் தொகுப்பு கேதீஸ் கொல்லப்படுவதற்கு முன்னர் பல தடவைகள் இலண்டனில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்புக்களின் நேரம் மற்றும் தொடர்பாடப்பட்ட நிமிடங்கள் எத்தனை என்பதைக் குறித்திருந்தன....... கொலை நடைபெறுவதற்கு முன்னர் அலிகவிற்கு இலண்டனில் இருந்து அழைப்புக்கள் எடுக்கப் பட்டிருப்பதை அறியத் தந்த அந்தக் குறிப்புக்களில் இலக்கங்கள் மாறுபடுவதைக் காண முடிந்தது..... ஆனால் அலிக அந்த நேரத்தில் இலண்டனுடன் தொடர்பை ஒரு முறை ஏற்படுத்தியிருந்தான்... அந்த இலக்கம் மூன்றாவது சந்தேக நபருடையதாக இருப்பது தெளிவாக வெளிக்காட்டப்பட்டிருந்தது....

அதற்கு அடுத்த தொகுப்பு கொல்லப்படுவதற்கு முன்னர் கேதீஸின் கைத்தொலைபேசித் தொடர்பாடல் பற்றியதாக இருந்தது...... இலண்டனில் இருந்து அவனுக்குக் கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்புக்கள் யாவும் நிறந்தீட்டப்பட்டிருந்தன.... அவை யாவும் அவனது மனைவியிடம் இருந்து கிடைத்ததாகவே இருந்தன... அவ்வழைப்புக்களும் சுமார் 8.15லிருந்து 9 மணி வரைக்குமானவையாக இருந்தன......

கொலைஞனுடனும் தொடர்புகள்...... கணவனுடனும் தொடர்புகள்........ என்ன பேசப்பட்டிருக்கலாம் அங்கு.....? ஒரு காலத்தின் முடிவில் இந்த வினாவிற்கு விடைகள் கிடைக்காமலே போகலாம்....? கிடைக்காமல் போகுமா?......

அடுத்த தொகுப்பு கொலை நடந்த பின்னர் அலிகவின் தொலைபேசித் தொடர்பாடல்களில் இலண்டனுடன் அவன் பேசிய நாட்கள் நேரங்கள் சம்பாசித்த நிமிடங்கள் என்பவற்றின் தொடர்ச்சியாக இருந்தது...

அலிக இலங்கையில் இருந்து மேற்கொண்டு அழைப்புக்கள் யாவும் ஒரே இலக்கத்தை நோக்கிப் பதியப்பட்டிருந்தன... இலண்டனில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அழைப்புக்களின் இலக்கங்கள் மாறு மட்டுக்கொண்டிருந்தன....

பெரும்பாலும் பின்னிரவில் தொடங்கி முன்விடியல் நேரங்கள் வரை சம்பாசனைகள் தொடர்ந்ததை அப்பட்டியல்கள் தெளிவறத் தெரிவித்திருந்தன.

தொகுத்தளிக்கப்பட்டிருந்த பட்டியல்கள் இவையாவும் முதலாவது மற்றும் மூன்றாவது சந்தேக நபர்களிடையே இருந்த தொடர்பாடலுக்குக் கட்டியம் கூறின.

தொகுப்பு அறிக்கையின் அடுத்த பக்கத்தில் அவர்களிடையேயான ஸ்கைப் தொடர்பாடல் விபரங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டிருந்தன..... அவை நீண்டு ...நீண்ட பல தாள்களை தன்னுள்ளே விழுங்கி வாசித்து முடிக்கப் படமுடியாத புத்தகமாய் நீண்டிருந்தது.

அப் பக்கங்களில் தமது நேரத்தைச் செலவிட விரும்பாதவர்கள் பயணித்த அடுத்த பக்கத்தில் சில படங்கள் பதிவாகியிருந்தன. அவை மொத்தமாக எட்டுப்படங்களாக இருந்தன....... அவற்றின் பதிவுகள் சந்தேக நபர்கள் இருவரும் அன்னியோன்னியமாக இருக்கும் சில படங்களையும் கொண்டிருந்தன. அவை யாவும் அலிகவின் மடிமேற் கணணியில் இருந்து பிரித்து எடுக்கப்பட்டிருந்தன.... அவை..... இன்னும் இன்னும் மூன்றாவது சந்தேக நபரின் தொடர்பை இக்கொலையில் வலுப்படுத்தியிருந்தன......

அடுத்து சில உரையாடல்களின் எழுத்து வடிவம் அங்கு தொகுக்கப் பட்டிருந்தன.... அவை கொல்லப்பட்டவரின் மனைவிக்கும் கொல்லப்பட்டவரின் பெற்றோருக்கும் இடையிலான தொடர்பாடல்களின் எழுத்து வடிவமாக இருந்தன.... அவ் எழுத்து வடிவங்களின் ஆதாரமாக கொல்லப்பட்டவரின் மனைவி கொல்லப்பட்டவரின் பெற்றோரிடம் மேற்கொண்ட தொலைபேசித் தொடர்பாடலின் எண்ணியற் பதிவாக குறிக்கப்பட்டிருந்தது.

அத்தொடர்பாடலின் மிக முக்கிய விடயமாக நிறமிடப்பட்டிருந்தன சில இடங்கள்......

அவற்றுள் ஒன்று கொலை நடந்த தினமான 18ம் திகதி மதியநேரம் சிலர் யாதோ ஒரு விடயத்தை திருகோணமலையில் கதைத்ததை தான் காவல்துறைக்கு மட்டுமே தொடர்பாட இருப்பதாக ஹிம்சா அவரது மாமியாருக்கும் மாமனாருக்கும் கூறியிருந்தார்..... 29.05.2012 அன்று இரவு 10.08 நிமிடம் தொடக்கம் ஹிம்சாவுடனான தொடர்பாடல் பதிவுகளில் இருந்து இவ்விடயம் தெரியவந்துள்ளது. சரியாக இரவு 10.38 நிமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட அழைப்பின் போது சரியாகப் 13 நிமிடம் 11 வினாடிகள் கழிந்த நிலையில் ஹிம்சா கேதீஸ் கொலை செய்யப்பட்ட தினத்தின் மதியநேரத்தில் யாரோ கதைத்தாக சில வார்த்தைகளைத் தெரிவித்திருந்தாள். அவ்வார்த்தைகள் அச்சொட்டாக " உங்கள நாய்க்கு வந்தமாதிரிக் கிழிச்சு முடிஞ்சு என்ட வீட்டாக்களையும் கதைச்சு முடிஞ்சு... சரியா.... கேதீஸ இண்டைக்குத்தான் பாக்கிற கடைசி எண்டு சொல்லி நடந்நதது.... எண்டு சொன்னது எனக்குத் தெரியும்" என அப்பதிவின் 13 நிமிடம் 31 வினாடிகளில் அவளொரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தாள்....... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -17 அர்ப்பணிப்பும் அபகரிப்பும்



(வி.என்.சந்திரகாந்தி)

வாழ்க்கையில் நாம் பலவித மனோபாவங்கள் கொண்டவர்களுடன் பழக வேண்டியவர்களாக இருக்கின்றோம். அன்னை தெரேஸாவின் அன்பு, சேவை, தொண்டு ஆகியவற்றுடன் இணைந்த அவரது அர்ப்பணிப்புகளை உலகமே அறியும். அதற்காக அவர் நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்! ஏனைய பிரதேசங்களையும் நாடுகளையும் வளங்களையும் அபகரிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு கொண்ட ஹிட்லர், நெப்போலியன் போன்ற அரசியல் தலைவர்கள் நாம் காண இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அர்ப்பணிப்புடன் வாழ்பவர்களை நீங்கள் அரிதாகவே சந்திக்க முடியும். ஆனால் அபகரிக்கும் வக்கிரபுத்தியுடன் வாழ்பவர்கள் உங்களுக்கு மிக மிக அண்மையிலும் இருக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டு எச்சரிக்கையுடன் காலத்தை ஓட்ட வேண்டியது உங்கள் பொறுப்பு.

அர்ப்பணிப்பு என்றால் ஏதோ எங்களால் முடிந்ததை மற்றவர்களுக்கு ஆற்றுதல் என்பதாகாது. அது ஏழ்மையிலும் பட்டினியிலும் நோயிலும் பயங்கரவாதத்தின் கொடுமையான செயல்களிலும் இடம் பெயர்வு காரணமாக தங்குமிட வசதி இழந்த நிலையிலும் துன்புறும் மக்களின் தேவைகளினை எங்களது சக்திக்கு அப்பால் முயன்று நிறைவேற்றுதலாகும். இறைவனை காணவேண்டும் என்று கோயில் தீர்த்தக்கரைகள் உபந்நியாச மண்டபங்கள் தியான சாலைகள் என்றெல்லாம் அலைய வேண்டியதில்லை

சுத்தமான மனதை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் தேவைகளை அடியொட்ட சுருக்கிக் கொள்ளுங்கள். ஏழை எளியவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள். அவர்களின் முகத்தில் உங்களால் இறைவனைக் காண முடியும். அது மட்டுமன்று, எந்தக் காரியத்தையும் நாம் அர்ப்பணிப்புடன் செய்தால் வெற்றி நிச்சயம் என்பதை எமது மனத்தில் இருத்திக் கொள்ளல் வேண்டும்.

அர்ப்பணிப்புடனான உழைப்பு எமது வாழ்வை சிகரத்துக்கு இட்டுச் செல்லும். அர்ப்பணிப்புடனான பயிற்சியும் வேகமும் விளையாட்டில் மட்டுமன்றி எந்த ஒரு போட்டியிலும் வெற்றியைப் பெற்றுத் தரும். அர்ப்பணிப்புடன் வாழ்பவர்களைச் சுற்றித்தான் உறவுகளும் நட்புகளும் குவியும். அதனால் உண்டாகும் மகிழ்ச்சியை அனுபவித்துப் பார்த்தால்தான் அதன் உயர்வைப் புரிந்துகொள்ளமுடியும். அடுத்து பெரும்பான்மை பலத்துடன் எம்மைச் சுற்றி வாழ்ந்துகொண்டிருக்கும் அபகரிக்கும் சிந்தனை கொண்டவர்களின் நோக்கங்களினையும் நடத்தைகளையும் முயற்சிகளையும் அவதானிப்போம்

சுயநலமே அவர்களின் சிந்தனையாக இருக்கும். ஏழைகளுக்கு எதுவும் ஈயமாட்டார்கள். ஆனால் பால் பழம் வடை, மோதகம், வெற்றிலை, பாக்கு, சாம்பிராணி, பணம் அனைத்தும் தட்டில் வைத்து இறைவனுக்கு அர்ச்சனை செய்வர். அன்னதானம் செய்ய முன்வரார்.

தெருவில் ஒரு குழந்தையோ பெண்ணோ விபத்து நிமித்தம் காயம் பட்டு விட்டால் அந்த இடத்தில் நடந்தது என்ன என்பதை நோட்டமிட்டுவிட்டு முதலில் நழுவும் நபர் இவர்தான். ஏழை அநாதைகள் வீட்டுக்கஷ்டம் நிமித்தம் சிறுவியாபாரம் செய்தால் அவர்களுடன் கெடுபிடியாக பேரம் பேசி சாமான்களை குறைந்த விலையிலே கொள்வனவு செய்ய இவர் முயற்சிப்பார். யாராவது கஷ்டம் நிமித்தம் நகையை ஈடு வைத்து பணம் கேட்டால் பெரும் வட்டி பேசி உதவிசெய்ய முன்வருவார்.

அவரது நண்பரான உங்களுக்கு பண உதவி தேவைப்பட்டால் வேறு ஒருவரிடம் பெற்றுத்தருவதாகக் கூறி தானே பணம்தந்து கறார் வட்டியும் வாங்குவார். பெரும் வட்டி காரணமாக நகை மூழ்கிவிட்டதாக கதை அளப்பார். தனது பக்கம் குற்றம் சாட்ட முடியாது என்று அவர் உறுதியாக இருந்தால் மற்றவரது பணம் நகை மற்றும் பெறுமதியான பொருள் காணி என்பவற்றையும் கையாடுவார்.

அவையாவற்றுக்கும் மேலாக குற்ற உணர்வு காரணமாக எப்போதும் தனது செயல்களை நியாயப்படுத்தி வாதாடுபவராக இருப்பார். மேலே நான் குறிப்பிட்டவர் ஒரு தனிநபர். அவரது அபகரிக்கும் நடவடிக்கைகளும் ஒரு எல்லைக்குள்தான் இருக்கும். ஆனால் அவர் உங்களுக்கு மிக மிக அண்மையில் வாழ்பவர், இனி சற்று பரந்த அளவில் பார்த்தால் திருடர்கள், வழிப்பறி கொள்ளையில் ஈடுபடுவோர் பொய், புரளி, பித்தலாட்டடம் செய்வோர் என பட்டியல் நீளும். மக்களிடம் பணம் அபகரிக்கும் கைங்கரியத்தில் நிதி நிறுவனங்கள் தான் இன்று முன்னணியில் நிற்கின்றார்கள்.

எனது நண்பர் ஒருவர் 2010ல் ஒரு நிதி நிறுவனத்தில் ரூபா ஒன்றரை இலட்சத்தை நிரந்தர வைப்பில் இட்டார். 2011இல் அந் நிறுவனம் அவருக்கு ஆசைகாட்டி அப்பணத்தை 'பங்குகளில்' முதலீடு செய்ய வைத்தது. ஓரிரு வருடங்களின் பின்னர் தான் அவர் தனது பணம் அபகரிக்கப்பட்டுவிட்டதென்பதையும் அந்த நிறுவனம் பாரிய நட்டத்தில் இருப்பதையும் பங்குகளின் சந்தைப்பெறுமதி வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுவதையும் பங்குகளிற்குரிய இலாபம் வழங்கப்படமாட்டாதென்பதையும் புரிந்து கொண்டார். 2014 வரை அவர் நேரிலும் கடித மூலமும் தனது பணத்தை திரும்பத் தருமாறு பல வேண்டுகோள்களினை அனுப்பினார். பதிலே இல்லை. கௌரவ ஜனாதிபதியின் செயலாளர் வரை பல உயர் அதிகாரிகளிற்கும் முறையிட்டார். யாது பயனும் இல்லை

இறுதி முயற்சியாக அவர் நிதிக்கான குறைகேள் அதிகாரிக்கு (OMBUDSMAN) உரிய முறையில் முறைப்பாடு செய்தார். அதிகாரி 07.07.2014ல் கொழும்பில் விசாரணை ஒன்றை மேற்கொண்டார்.

அந் நேரத்தில் பங்குகளின் உண்மையான சந்தைப்பெறுமதிக்கு மேலதிகமாகக் கழிக்கப்பட்ட ரூபா 22500/= ஐ நிறுவனம் முறைப்பாட்டாளருக்கு திரும்பச் செலுத்த வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

பாருங்கள்! ஒரு தடவை உங்கள் பணமோ சொத்தோ உயிரோ அபகரிக்கப்பட்டுவிட்டால் அதனை மீட்பதென்பது அசாத்தியமானதே.

# தேசிய SMS செய்திகள்

- **வன்னியில் இராணுவத்தை குறைக்க நடவடிக்கை**

வன்னியில் இராணுவ பிரசன்னத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரான்கீன் உறுதியளித்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

- **தடம்புரண்டதால் சிக்கலுக்கு உள்ளாகி இருந்த மலையக ரயில் சேவைகள் வழமைக்கு**

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி சென்ற பொடி மெனிக்கே ரயில் இங்குருஓயா கலபொட புகையிரத நிலையத்திற்கு அண்மையில் தடம் புரண்டதால் பயணிகளுக்கு பல சிரமங்கள் ஏற்பட்டிருந்தது.

- **பாகிஸ்தானியர்களை மீண்டும் கைது**

அகதிகளுக்கான ஐ.நா.வின் ஆணையகத்தின் ஊடாக புகலிடம் கோரிய நிலையில் நீர்கொழும்பில் தங்கியுள்ள பாகிஸ்தான் பிரஜைகள் நேற்று முதல் மீண்டும் கைது செய்யப்படுவதாக பாகிஸ்தானியர்கள் தெரிவித்தனர்.

- **அதிகம் தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் முன்னிலையில் இலங்கை**

தற்கொலைகள் அதிகம் இடம்பெறும் நாடுகள் வரிசையில் இலங்கை நான்காவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. 172 உலக நாடுகளைக் கொண்டு உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் அதிகம் தற்கொலைகள் இடம்பெறும் நாடுகள் தரவரிசையில் இலங்கைக்கு நான்காம் இடம் கிடைத்துள்ளது.

- **படையினருக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டு உள்ளன**

காணமற்போனோர் குறித்து விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் விசாரணைகளை மாத்திரமே மேற்கொள்ள முடியும் தண்டனைகளை வழங்க முடியாது எனவும் அதனை ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டுமெனவும் அதன் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

- **கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினர் பதவியேற்பு**

கிழக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம்.லாஹீர் 05.09.2014 அன்று கிழக்கு மாகாண ஆளுனர் அட்மிரல் மொஹான் விஜய விக்ரம முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்ய உள்ளார்.

- **யானை பலி**

கிராந்துருகோட்டைப் பகுதியில் காட்டு யானை ஒன்று துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

- **தேர்தல்கள் ஆணையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்**

மக்கள் விடுதலை முன்னணி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்வைத்துள்ள முறைப்பாடு தொடர்பில் தேரதல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உடன விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

- **சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்கத் தயார்**

மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதனை ஏற்க தான் தயாரென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

- **அல் கய்தா தொடர்பில் கண்காணிக்கப்படும்**

அல் கய்தா தீவிரவாதம் தொடர்பில் கண்காணிக்கப்பட உள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

- **மகளை விபசாரத்தில் ஈடுபடுத்திய தாய் கைது**

தனது மகளை விபசாரத்தில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்து வந்த தாய் ஒருவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச்பை அதிகாரிகளால் நேற்றிரவு கொழும்புக்கு அண்மித்த பகுதியிலுள்ள ஹோட்டலொன்றின் அருகில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

- **துப்பாக்கியுடன் வந்து யுவதியை காதலிக்குமாறு மிரட்டிய நபர் கைது**

கோட்டே பகுதியில் வைத்து யுவதி ஒருவரிடம் துப்பாக்கியை காட்டி காதலை வெளிப்படுத்திய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

- **ஆமையை கடத்த முயன்ற சிறுவன் விசாரணையில்**

ஆமையொன்றை தனது உள்ளாடைக்குள் ஒளித்துவைத்துக்கொண்டு விமானத்தில் கடத்திச்செல்ல 8 வயதான சிறுவனொருவன் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்கப்பட்டுள்ளது.

- **துப்பாக்கியுடன் வந்து யுவதியை காதலிக்குமாறு மிரட்டிய நபர் கைது**

மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்திய 5 பேர் ஹப்புத்தளையில் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த 28ஆம் திகதி நடந்த இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட ஐவரில் பெண் ஒருவரும் அடங்கும்.

# நிகழ்வுகள்

## பௌர்ணமி தின நிகழ்வு

"மகுடம்" கலை இலக்கிய வட்டம் தமிழ் நாடக மன்றம் இணைந்து நடாத்தும் பௌர்ணமி தின நிகழ்வு "யாவரும் பேசலாம்" அமர்வு -03 எதிர்வரும் 08.09.2014 அன்று இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இலக்கிய கலாநிதி வ.சிவசுப்பிரமணியம், இலக்கிய கலாநிதி வித்துவான் சா.இ.கமலநாதன் கலாபூஷணம் சாரல்நாடன் அவர்களின் நினைவிடை தோய்தல் எனும் தலைப்பில் கருத்துப் பகிர்வும், கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வானது மட், பொது நூலக கேட்போர் கூடத்தில் மாலை 4.15 மணியளவில் ஆரம்பமாகி வரவேற்பரை, தலைமையுரை, நினைவுப் பகிர்வைத் தொடர்ந்து நன்றியுரையுடன் நிறைவுபெறும். இந்நிகழ்வுக்கு அனைவரையும் அழைக்கின்றனர் விழா

## மடத்தடி கிருஷ்ணர் – திருவிழா

படம் : அச்சுதன்



திருகோணமலை மடத்தடி அருள் மிகு ருக்மணி தயார் சமேத ஸ்ரீ கிருஸ்ணபகவான் ஆலய பிரமோற்ஸவத்தின் ஆறாம் நாள் திருவிழா இடம் பெற்றபோது விசேட வசந்த மண்டப பூசை அலங்காரத்தையும் பகவான் அஸ்வ வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாளிப்பதையும் ஆலய வீதியில் வலம் வருவதையும் ஆலய தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

செய்தி : சேனையூர் நிருபர்

## திருமலை பௌர்ணமி நிகழ்வு "நீங்களும் எழுதலாம்"

செய்தி : அச்சுதன்

நீங்களும் எழுதலாம் கவிதை சஞ்சிகை வாசகர் வட்டத்தின் பௌர்ணமி தின நிகழ்வு நீங்களும் எழுதலாம் ஆசிரியர் S.R.தனபாலசிங்கம் தலைமையில் திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியால மண்டபத்தில் 08.09.2014 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழத்தின் தமிழில் நிகழ்ந்த பாலஸ்தீன கவிதை மொழிப்பெயர்ப்பு முயற்சிகள் எனும் பொருளில் புலோலியூர் வேல்நந்தகுமார் உறையாற்றவுள்ளார். கொஞ்சமோ பிரிவினைகள் எனும் தலைப்பில் கவிஞர் மு.யாழவன் தலைமையில் இடம் பெறும் கவியரங்கில் எஸ்தர் விஜித் நந்தகுமார், ந.காளிதாசா (அதிபர்), நிலாவளியூர் கெஜதர்மா, சாரங்கன், நிரோசன், தேனுஜன் ஆகியோர் பங்கு பற்றுகின்றனர்.

அத்துடன் மறைந்த எழுத்தாளர்களான சாரல்நாடன், U.S.ஆனந்தமூர்த்தி, தொழிற்சங்கவாதி பாலாதம்பு ஆகியோருக்கான அஞ்சலி உரைகளை முறையே எழுத்தாளர் இராஜதர்மராஜா, விமர்சகர் யதீந்திரா, இலக்கிய ஆர்வலர் வே. பார்த்தீபன் ஆகியோர் ஆற்றவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், மாணவர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப்பலரும் கலந்து கொள்ள இருக்கின்றமை சிறப்பம்சமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கர்ப்பப்பை பிரச்சனையா?

ஒருவருக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால், அதன் அறிகுறிகள் ஏதும் வெளியே தெரியாது. கர்ப்பப்பை வாய் புற்றுநோய் முற்றிய நிலையை அடைய 10 ஆண்டுகள் ஆகும். இதனால்தான் குறிப்பிட்ட கால இடைவெளியில் டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்படுகிறது.

பிரச்சினை முற்றும் நிலையில், தாம்பத்தியத்தில் ஈடுபடும்போது அதிக வலி அல்லது ரத்தப்போக்கு ஏற்படலாம், வழக்கத்துக்கு மாறாக வெள்ளைப்படுதல், மாதவிலக்கின்போது ரத்தம் கட்டியாக வெளிப்படுதல் அல்லது மிகக் குறைந்த அளவில் உதிரப்போக்கு போன்றவை இதன் அறிகுறிகள். மெனோபாசுக்குப் பிறகு உதிரப்போக்கு இருந்தால் நிச்சயம் டாக்டரிடம் ஆலோசனை பெற வேண்டும்.

தவிர்க்க வேண்டியவை:

புகைபிடித்தலையும் திருமணமாகும் வரை உடல் உறவையும் தவிர்க்க வேண்டும். 9 முதல் 45 வயதுக்குட்பட்ட பெண்கள் கர்ப்பப்பை வாய் புற்றுநோயைத் தடுக்கும் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ளலாம். தாம்பத்திய வாழ்வைத் தொடங்குவதற்கு முன்னதாகவே இந்தத் தடுப்பூசியைப் போட்டுக்கொள்வது நல்லது. முதல் ஊசிக்குப் பிறகு எட்டு வாரங்கள் கழித்து இரண்டாவது டோஸ், ஆறு மாதங்கள் கழித்து மூன்றாவது டோஸ் என எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் சிறுவர்களும், இளம் ஆண்களும்கூட இதைப் போட்டுக்கொள்ளலாம். இதனால் பெண்ணுக்கு இன்னும் அதிகப் பாதுகாப்பு கிடைக்கும். என்னதான் தடுப்பூசி போட்டாலும், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனை செய்துகொள்வதன் மூலம் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் உயிரிழப்புக்களை முற்றிலுமாகத் தடுக்க முடியும்.

முற்றும்.. ..

## குடல்புண் (அல்சர்)

இன்றைய அவசர வாழ்க்கை சூழலில் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரும்பாலானோர் எதிர்கொள்கிற பிரச்சினை தான் அல்சர்(குடல் புண்). உணவு பாதையில் உள்ள உணவு குழாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் போன்றவற்றில் ஏற்படும் திசுக்கள் சிதைவு மற்றும் பாதிப்பே குடல்புண் எனப்படும். அதாவது வயிறு மற்றும் குடல்களின் சுவர்களில் ஏற்படும் புண் என்றும் கூறலாம்.

பொதுவாக பசித்ததும் வயிற்றில் அமிலம் சுரக்கத் தொடங்கும். அந்நேரம் சாப்பாட்டை தவிர்த்தால் குடல் புண் வரலாம். குறிப்பாக காலை உணவை தவிர்ப்பதாலும், நேரந்தவறி சாப்பிடுவதாலும் குடல் புண் வரும் வாய்ப்புகள் அதிகம். கலப்பட உணவு, அசுத்த குடிநீர், மோசமான சுற்று சூழலாலும் ஹெலிகோபேக்டர் பைலோரி (Helicobactor pylori) என்ற பாக்டீரியாவாலும் குடல் புண் ஏற்படுகிறது.

குடல் புண்ணுக்கான அறிகுறிகள்

- வயிற்றில் எரிச்சலுடன் கூடிய கடுமையான வலி
- நெஞ்செரிச்சல்
- வயிறு வீங்குதல்
- பசியின்மை, உடல் எடை குறைதல்
- வாந்தி, குமட்டல், வாயுக் கோளாறு



இதைத்தடுக்க செய்யவேண்டியவை.

- காரமான உணவுப் பொருட்களை தவிர்த்து, உடலுக்கு ஏற்ற உணவுகளை மட்டுமே உண்ண வேண்டும், பின் இரவு விருந்துகளை தவிர்க்க வேண்டும்.
- புகைபிடிக்கக் கூடாது, மருத்துவ ஆலோசனைகளை அலட்சியப்படுத்தக் கூடாது.
- காபி, மது, காற்று அடைக்கப்பட்ட பானங்களைத் தவிர்க்க வேண்டும்.
- டீ தடை செய்யப்பட்ட பானம் அல்ல. இருப்பினும் பால் கலக்காத டீயைச் சாப்பிடக் கூடாது. தினமும் சாப்பிடும் டீயின் அளவைக் குறைத்தக் கொள்ள வேண்டும்.

சாப்பிட வேண்டியவை

- சத்தான சரிவிகித உணவு, குறிப்பிட்ட நேரத்தில் உண்ணும் பழக்கம்.
- பச்சையான, நன்கு பக்குவம் அடையாத வாழைப் பழங்கள் குடல் புண்களை ஆற்றும் குணத்தைப் பெற்றிருக்கின்றன.
- பச்சைத் தண்ணீரை அதிகம் குடிக்க வேண்டும். வலியோ அல்லது அசௌகரியங்களோ ஏற்படலாம் என்ற உணர்வு ஏற்பட்டவுடன் ஒரு டம்ளர் நீர் குடித்தால் அமிலமானது நீர்த்துப் போய் விடுகிறது.

– தொடரும் –

# குறுக்கெழுத்து புதிர் 025

முடிவுத் திகதி : 11.09.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | | ■ | 2 | | | 15 | |
| 3 | | | ன் | | | 4 | | |
| | | ■ | 16 | | | ■ | | ■ |
| | க | ■ | | ■ | 5 | | | ■ |
| ■ | | ■ | | ■ | ல | ■ | 6 | |
| 7 | | 17 | | ■ | | ■ | | ■ |
| | ம் | | 8 | | | ■ | 9 ரோ | |
| | ■ | 10 | ட் | | | ■ | ■ | ■ |
| | ■ | | | 11 | 12 | | 13 | |

### இடமிருந்து வலமாக

1. பூக்களைக் கோர்த்தால் கிடைக்கும்
2. குளத்திலுள்ள சிவப்பு மலர் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது.
3. உலகினைக் கலைத்த அழகிகளில் ஒருவர்
4. யூலியட்டின் காதலி
5. இசையை உருவாக்கும் பானை
6. அணைந்ததாய் வெளியே தெரியும் நெருப்பு
7. இரவில் தங்கும் இடம்
8. இது போனால் உடல் உடலம் ஆகம்
9. இத்தாலியின் தலைநகரம்
10. மாவினால் செய்யப்படும் உணவு
11. அடுப்பு எரியாவிட்டால் இது வரும்
12. சிறையில் இருப்பவர்
13. முக்காலமும் உணர்ந்தவர்

### மேலிருந்து கீழாக

1. எறிந்தால் திரும்பிவரும் ஆயதம்
5. ஆணும் பெண்ணும் இணைவது
6. கறுப்பினத்தரவரைக் குறிக்கும் பொதுப் பெயர்
7. அங்குசத்தால் இதனை அடக்க முடியாது
8. காசு தேவைப்படும்போது கூறுவது
10. சமாதானத்தின் பறவை
12. திசையை அளக்கும் அளவீடு
14. பெண்களுக்கு இங்கும் புற்றுநொய் வரும்
15. செப்பை இப்படிச் சொல்லாம்
16. நாடுகளைத் கடக்கத் தேவையான புத்தகம்
17. மீட்டப்படும் வாத்தியம் - ஒரு எழுத்து குழம்பியுள்ளது

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

### புதிர் 024 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 13 ர | 14 வெ | டி | ■ | ■ | 2 க | 15 து | வீ |
| ன் | ச் | ட் | ■ | 16 வ | ■ | 3 ப | ளை | ம |
| 4 மா | சு | 5 க | ட் | ட | 17 பொ | ம் | 18 ம | ன் |
| ன | 19 வ | ம் | ■ | 6 து | ரு | க் | கி | ■ |
| ம் | ரோ | ப | ■ | ரு | ளா | ■ | 7 சா | 20 வி |
| ■ | 8 த | ர் | ணா | வ | 9 தா | வ | ர | ம் |
| 10 க | ய | வ | ன் | ம் | ர | ட | சு | 21 ப |
| ட் | ம் | ■ | ■ | ■ | ம் | க் | ன் | ம் |
| 11 சி | ல | ம் | பு | ■ | ■ | 12 கு | ட் | டை |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*திரு. ஈ. சந்திரகாந்தன்*
*இல. 01, மத்தியவீதி, திருகோணமலை.*

*திரு. பு. அச்சுதன்*
*11/23, ஏகாம்பரம் வீதி, திருகோணமலை.*

*செல்வி. வீ. செல்வி*
*32ஏ, மத்தியவீதி, திருகோணமலை.*

# சிறுவர் முரசு



## சிந்திக்க .. ..

அன்பை வெளிப்படுத்த யோசிக்காதே:
கோபத்தை வெளிப்படுத்தும் முன்
யோசிக்க மறந்துவிடாதே!!

## ஏமாற்றுதல் நல்லதல்ல — குட்டிக்கதை

ஒருவன் தனது கிணற்றை ஒரு விவசாயிக்கு விற்றான். அப்பாடி ஒரு வழியாக என் வயலுக்கு தண்ணீர் இறைக்கும் பிரச்சினை இனி ஒரு போதும் இல்லை என எண்ணிக் கொண்டார்.

வாங்கிய விவசாயி அடுத்த நாள் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க ஆவலுடன் கிணற்றுக்கு வந்தான். அப்போது விற்றவன் அங்கே நின்று கொண்டிருந்தான். விவசாயியை தண்ணீர் எடுக்க விடாமல் தடுத்தான். விவசாயிக்குக் கோபம் வந்தது. "எனக்குக் கிணற்றை விற்று விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுக்க விடாமல் செய்கிறாயே?" என்று விற்றவனை கோபத்துடன் கேட்டான்.

விற்றவன் "ஐயா! உமக்கு நான் கிணற்றை மட்டும்தான் விற்றேன். அதிலிருக்கும் தண்ணீரை அல்லவே!!" என்று தர்க்கம் செய்தான். விவசாயி குழப்பத்துடனும் கோபத்துடனும் காஜியிடம் (நீதிபதியிடம்) சென்று முறையிட்டான். நீதிபதி இருவரையும் அழைத்து இருவர் பக்கத்து நியாயத்தையும் விசாரித்தார். பின்னர் கிணற்றை விற்றவனிடம் "நீ கிணற்றை விற்றுவிட்ட படியால் அது உன்னுடையதல்ல. கிணற்றினுள் இருப்பது உன்னுடைய தண்ணீர் என்று நீ கூறுகின்றாய். விற்ற அக்கிணற்றில் உனது தண்ணீரை இன்னமும் வைத்திருப்பது தவறு. உனக்கு அதில்தான் தண்ணீரை சேமித்து வைக்க வேண்டுமென்றால் விவசாயிக்கு அதற்கான வாடகையை தினமும் கொடுத்து விடு. இல்லையென்றால் கிணற்றிலிருந்து உனது தண்ணீரை எடுத்துக் கொண்டு உடனே வெளியேறு" என்று தீர்ப்புக் கூறினார்.



விற்றவன் தலையைக் குனிந்து கொண்டே, தனது தவற்றுக்கு மன்னிப்புக் கோரி விட்டு, விவசாயியை கிணற்றின் முழுப் பலனையும் அனுபவிக்கச் சொல்லிவிட்டு, அங்கிருந்து சென்று விட்டான்.

– மற்றையவரை ஏமாற்றி வாழ்தல் நன்மை பயக்காது –



ஈ.பிரகாஷ், திருகோணமலை.



ம.அச்சுதன், புனித வளனார், திருமலை.



எத்தனை உருவங்கள் உள்ளன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. ஒரு பக்கத்தின் நீளம் 4.6cm ஆன சமபக்க முக்கோணி ஒன்றின் சுற்றளவைக் காண்க.

2. 8 புத்தகங்களின் விலை ரூபா x ஆகும். ஒரு புத்தகத்தின் விலை யாது?

3. சுருக்குக. $77 + 7.7$ 4. சுருக்குக. $11 + (-7)$

5. பிஸ்கட் பெட்டி ஒன்றின் உயரம் 30cm ஆகும். அத்தகைய 5 பெட்டிகள் ஒன்றன் மீதொன்றாக வைக்கும் போது மொத்த உயரத்தை மீற்றரில் தருக.

6. ஒருவர் ரூபா 250 இற்கு வாங்கிய பொருள் ஒன்றை ரூபா 300 இற்கு விற்றார். அவருக்கு கிடைத்த இலாபம் யாது?

7. $2 : 3 = 6 : m$ எனின், m இன் பெறுமானத்தைக் காண்க.

8. 2.5 கிலோமீற்றரை மீற்றரில் காட்டுக.

9. $x + 5 = 8$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

10. பின்வரும் ஈட்டுக்களின் ஆகாரம் யாது? 3 , 5 , 6 , 9 , 5 , 1

11. $^1/_3$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

12. ஒரு கிலோகிராம் சீனியின் விலை ரூபா 42 எனின், 500 கிராம் சீனியின் விலை யாது?

13. ஒரு பென்சிலின் விலை ரூபா 6.50 ஆகும். அத்தகைய 1 டசின் பென்சிலின் விலை யாது?

14. ஒரு புத்தகத்தின் விலை ரூபா 34 ஆகும். அதனை வாங்குவதற்காக ரூபா 50 ஐ வர்த்தகருக்கு கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் யாது?

15. $^1/_5$ ஐச் சதவீதமாக காட்டுக. 16. $x = 7$ எனின், $x^{-2}$ இன் பெறுமானம் யாது?

17. சன்பாடு $3x + y = 2$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறனையும் வெட்டுத்துண்டையும் காண்க.

18. $(x^2 - 4x - 12)$ இன் ஒரு காரணி $(x + 2)$ ஆகும். அதன் மற்றைய காரணியைக் காண்க.

19. மெல்லிய கம்பித் தடம் ஒன்றினால் 7cm ஆரையுடைய வட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வட்ட கம்பித்தடம் வெட்டி நீட்டப்பட்டு சதுர வடிவத் தடமாக மாற்றப்பட்டுள்ளது. இச்சதுர வடிவ தடத்தின் பரப்பளவு யாது?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
30.08.2014 முதல் பிரதி சனி தோறும் மு.ப10-12 வரை G.C.E (O/L) மாணவர்களுக்கான மாதிரி வினாப் பரீட்சை நடைபெறவுள்ளது. முன்கூட்டியே பதிவு செய்து பங்குபற்றவும்.

## பாடம் : விஞ்ஞானம்

1. குருதியில் இருக்கும் பின்வரும் சிறுதுணிக்கை வகைகளுக்கிடையே கருவைக் கொண்டிராத சிறுதுணிக்கை வகை யாது?
   1. ஒற்றைக் குழியங்கள் 2. நிணநீர்க் குழியங்கள் 3. சிறு தட்டுக்கள் 4. இயோசினாடிகள்

2. அமிழ்ந்த இலைவாய்கள் உள்ள இலைகள் எந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரங்களில் இருக்கும்?
   1. நீரினுள்ளே அமிழ்ந்திருப்பதற்கு 2. நீரின் மீது மிதந்து கொண்டு இருப்பதற்கு
   3. உலர்ந்த காலநிலை இருக்கும் பிரதேசங்களில் வளர்வதற்கு
   4. நல்ல ஈரலிப்பு உள்ள பிரதேசங்களில் வளர்வதற்கு

3. மனித உடலில் சமநிலையைப் பேணுவதற்குப் பின்வருவனவற்றில் எது உதவுகின்றது?
   1. நத்தைச்சுருள் 2. செவிச்சிற்றென்புகள் 3. செவிப்பறை மென்சவ்வு
   4. தலைவாயில் உபகரணம்

4. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் வெல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
   1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
   3. ஈவையினாலான ஆர்முடுகல் 4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்

5. மனிதர்களிடையே காணப்படும் பரம்பரை நோயாக அமையாதது எது?
   1. கழலை 2. குருதியுறையா நோய் 3. நிறக்குருடு 4. அரிவாட் கலக் குருதிச்சோகை

6. இயக்கு நரம்பின் தொழில்
   1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
   2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்

7. பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத ஒரு தொழில்
   1. சிறு கிளையை வேர்விடச் செய்தல் 2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
   3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
   4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்

8. இரண்டு நரம்புக் கலங்கள் சந்திக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. இரன்வியரின் கணு 2. நரம்பு நாருறை
   3. நரம்பிணைப்பு 4. உட்காவு நரம்பு முனை

9. வன்கூட்டுத்தசையின் இயல்புகளைப் பின்வரும் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது?
   1. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்குகின்றது.
   2. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்காதது.
   3. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்குகின்றது.
   4. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்காதது

10. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
   1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
   2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
   3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
   4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்

12. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
   1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகையுறுவதைத் தடுத்தல்
   2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
   3. வயிறு வெளியே தள்ளப்பட்டிருப்பதைத் தடுத்தல்
   4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

13. இலிங்கமிணைந்த பின்னிடைவுப் பரம்பரையலகின் விளைவாக உண்டாகும் நோய் நிலைமை?
   1. வெளிறல் 2. குருதியுறையாநோய் 3. தலசீமியா
   4. அரிவாளுருக் கலக் குருதிச்சோகை

## பாடம் : வரலாறு

1. திரிபீடகம் தொகுக்கப்பட்டு எழுத்து வடிவம் பெற்ற இடம்
   1.கல்விகாரை 2.அலுவிகாரை
   3.ஜேத்தவனராமய 4.திஸ்ஸமகாராம

2. புவியியலின் அமைப்புக் காரணமாக நிலை பெற்ற இராசதானி
   1.அநுராதபுர 2.பொலநறுவை
   3.கண்டி 4.சீதாவாக்கை

3. பின்வருவனவற்றுள் தொல்பொருள் மூலாதாரமாக கருத முடியாதது?
   1.அம்பகமுகல்வெட்டு
   2. வெஸ்ஸகிரி கல்வெட்டு 3.சமந்தபாஸாதிகாவ
   4. கல்பொத்த

4. வல்லிபுர பொற்சாசனம் மூலம் வெளிப்படும் விடயம்
   1. விஜயபாகு காணிகளை பகிரந்தளித்தமை
   2. வசபனின் சுரங்கவழி நீர்ப்பாசனம்
   3. வசப மன்னனின் நாகதீப ஆட்சிப்பரம்பல்
   4. மகாசேனனின் நீர்ப்பாசன திட்டப்பணி

5.

| | |
|---|---|
| 1. மல்வத்து ஓயா | A உருவெலகம |
| 2. கலா ஓயா | B அனுராதகம |
| 3. கிரிந்தி ஓயா | C மகாகம |
| 4. மாணிக்க கங்கை | D கஜரகம |

நதிக்கரைகளில் தோற்றம் பெற்ற குடியேற்றங்களின் ஒழுங்கு

1.ABCD 2.BCAD 3.BACD 4.CBAD

6. ஆரியர் இந்தியாவில் குடியேறிய முதல் பிரதேசம்
   1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி
   3. விந்திய மலைத்தொடர் 4. இமாலயம்

7. ஆரியரின் சமூக அமைப்பில் சத்திரியரால் ஆற்றப்பட்ட பணிகளுள் பொருத்தமற்றது
   1. நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுத்தல்
   2. அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டுமக்களை பாதுகாத்தல்
   3. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
   4. கல்வி கற்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபடல்

7.
A. மூன்றாவது பௌத்த பேரவை மாநாட்டைக் கூட்டல்
B. மகாயான பௌத்தத்தை சீனாவில் பரப்புதல்
C. சாஞ்சி தூபி உட்பட பல தூபிகளை அமைத்தல்
D. நீலராஜன்,ஹஸ்திவர்மன் போன்றோரை தோற்கடித்தல்
மேற்படி விடயங்களுள் மௌரியர் கால நிகழ்ச்சி

1. AB 2. AC 3. CD 4. BD

8. மகாராஜாதிராஜா என்ற பட்டத்தை பெற்றுக் கொண்ட குப்த பேரரசின் முதல் மன்னன்
   1. சந்திரகுப்தன் 2. சமுத்திரகுப்தன்
   3. சந்திரகுப்த மௌரியன் 4. குமார குப்தன்

9. இறந்தவர்களுக்கான மரணச்சடங்கு சம்பிரதாயங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்ற இடங்கள்
   1. கித்துல்கல,பாகியன்கல,பட்ட தொம்ப
   2. பட்டதொம்ப,அலுலென,பெல்லன்பதிபெல்லச
   3. பாகியன்கல,நில்கல,பெலிகல்கே
   4. இராவணன் எல்ல,நில்கல,கித்துல்கல

10. இலங்கையில் மகாவலி ஆறு சங்கமிக்கும் இடத்தில் அமையப் பெற்ற துறைமுகம்
   1. உருவெல 2. கோகண்ண 3. கொடவாய

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01. Choose the correct word.
(come across, blow up, make up, run out, tell off, break up, give up, take up, turn down, set off, take back, take on, put up with, go over)

1. Unfortunately, I had to ................ Bob because of his poor performance recently.
2. If you really want to lose weight, you need to ............... eating deserts.
3. I want you to ............... every bad word you've said about my brother.
4. I was ................ an old t-shirt when I this photograph of my high school class.
5. Look Magda, I've .................. your bad behaviour long enough!
6. There is just too much work to be done. We'll have to ................ some new employees.
7. You don't think I believe that ridiculous story you ................. do you?
8. We'd better stop soon. Otherwise, we'll .................. of gas.
9. Jack and Gosia ............... last week. They just weren't happy together.
10. We .............. at six in the morning on our drive to the coast.
11. When the father saw what had happened he ............ and shouted at his son.
12. I had to .............. her offer of a job. The salary on offer was just not good enough.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம் ஏக்கர்.....

விழாவில் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் இசைக்கப்பட்டதையிட்டுத் தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

தமிழர்களும் தமிழ் பேசும் மக்களும் செறிந்து வாழும் மூதூர் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட விழாவில் சிங்களத்தில் ஏன் தேசிய கீதம் இசைக்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பிய அவர் எமது உரிமைகளைச் சிறுகச் சிறுக விட்டுக்கொடுப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லையெனத் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்விற்கு முன்னர் அவர் கிண்ணியாவில் கலந்து கொண்ட நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டதைப் பாராட்டிப் பேசிய போது பின்வருமாறு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

"சிறுபான்மையின மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நான் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நிகழ்விலும் தமிழில் தேசிய கீதத்தை பாடும் நிகழ்ச்சிகளையே ஏற்பாடு செய்வேன்.

இன்று கிண்ணியாவில் அதை துணிவோடு செய்தார்கள். நான் அதற்காக இங்குள்ள ஏற்பாட்டாளர்களைப் பாராட்டுகின்றேன்.

ஓர் உத்தியோக பூர்வ நிகழ்வில் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டும்தான் பாட வேண்டும் என்று ஒரு தேவையில்லாத வலுக் கட்டாயம் திணிக்கப் படுகின்றது.

இந்தத் திணிப்புக் கெதிராக பேசுவதற்கும் அதற்கு கெதிராக துணிவோடு நடப்பதற்கும் எங்களால் முடியவில்லை என்றால் நாங்கள் இந்த ஆட்சியில் பங்காளியாக இருப்பதில் அர்த்தமில்லை.

எந்த மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொண்டுவரப்பட்ட பின் அந்த இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தை பாடுவதில் என்ன தவறு இருக்கின்றது.

ஆணைக்குழுவை அமைத்து அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று சர்வதேசத்துக்கு பறை சாற்றுவதில் எந்த அர்த்தமுமில்லை.

எனவேதான் இந்த நாட்டில் நீதி அமைச்சராக இருந்து கொண்டும் அரசாங்கத்தில் அங்கமாக இருந்து கொண்டும் இந்த விடயத்தில் கொஞ்சம் பிடி வாதப் போக்கை நான் கடைப்பிடிக்கிறேன்" என அவர்

## கொங்கிறீற்று ....

தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூலக்குழுவின் செயலாளருமான திரு. நடனசேகரம் ஆதரவளித்தாகவும் தெரியவந்துள்ளது.

மழைகாலங்களில் சேறும் சகதியுமாக போக்குவரத்திற்குப் பயன்படுத்த முடியாத இவ்வீதியை கிறவல் மண் வீதியாக மாற்றுவதால் எவ்வித விருத்தியும் ஏற்படப் போவதில்லை என்று மூதூர் இந்துக் குருமார் சங்கத் தலைவர் மதிப்பிற்குரிய பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

இவ்வாறு கொங்கிறீற் வீதியை மண்வீதியாக்க கிராம அபிவிருத்திச் சங்கத்திடம் எவ்வித கோரிக்கையும் விடப்படவில்லை எனத் தெரிவித்த அவர், இவ்வாறு மாற்றப்பட முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிந்தவுடன் மூதூர் பிரதேசசபைத் தலைவருடன் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கியதாகவும் பிரதேசசபைத் தலைவர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கோரிக்கையின்றி அவ்வாறு மாற்றத் தான் அனுமதிக்கப் போவதில்லை என உறுதியளித்தாகவும் தெரிவித்துள்ளார்.

## மின்சார வேலி...

தற்காலிகமாக காட்டு யானைகளை விரட்டுவதற்காக யானை வெடிகள் குறித்த காவல் நிலையத்தில் கையளிக்கப்பட்டிருப்பதுடன் அதனை உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கொல்லப் பட்டவர்களுக்கு வன இலாகாவினால் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளன.

## ஆ யுதக்...

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா தென்னக்கோனினால் விடுதலை செய்யப்பட்டார்.

தனியார் பேருந்தில் துப்பாக்கியுடன் கிளைமோர்களைக் கடத்திய குற்றச்சாட்டில் கைதான இவருக்கு எதிராக முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியின் சாட்சியக் குளறுபடிகளைச் சுட்டிக்காட்டி வாதம் செய்ததால் இவர் விடுதலையானது குறிப்பிடத்தக்கது.

## அபாயாவுக்கு ....

மேற்குறித்த விடயம் தொடர்பாக எனது விளக்கத்தினையும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். பிரதேச செயலகம் என்பது ஒரு அரச நிறுவனமாகும் இந்நிறுவனத்தின் திணைக்களத்தலைவர் என்ற வகையில் சிறந்ததொரு அலுவலகக் கலாச்சாரத்தினை ஏற்படுத்தவும் உற்பத்தி திறனை மேம்படுத்தவும் ஊழியர்களுக்கிடையே ஒழுக்கவிழுமியங்ளை ஏற்படுத்தும் முகமாகவும் அலுவலக நிலையியற்கட்டளை வெளியிடுவது வழக்கமாகும்

அதற்மைய 2014.08.28 ந் திகதியும் என்னால் அலுவலக உத்தயோகத்தர்களுக்கு அலுவலக நிலையியற்கட்டளை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் பெண் உத்தியோகத்தர்களின் அலுவலக ஆடைதொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அலுவலகத்தின் பெண் உத்தயோகத்தர்கள் பலவேறுபட்ட உடைகள் அணிந்து அலுவலகத்திற்கு வருகை தருவது என்னால் அவதானிக்கப்பட்டது. அலுவலகக் கலாச்சாரத்தின் ஒரு அம்சமாக ஆடை காணப்படுவதால் ஏனைய அரச அலுவலகங்களைப் போன்று பெண் உத்தயோகத்தர்கள் சேலை அணிந்து வந்தால் இதனை சீர்செய்யமுடியும் என்ற கருத்தில் என்னால் குறித்த நிலையியற் கட்டளையில் அலுவலகத்தின் பெண் உத்தயோகத்தர்கள் சேலை அணிந்து அலுவலகத்திற்கு வரவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவித்தலானது எந்தவொரு சமய கலாச்சாரத்திற்கும் எதிராக விடப்பட்ட ஒரு கட்டளை அல்ல என்பதை ஆணித்தரமாக கூறிக்கொள்கின்றேன். மேலும் இஸ்லாமிய பெண் உத்தியோகத்தர்களும் கட்டாயமாக சேலை அணிந்து வரவேண்டும் என்ற கருத்தை தரும் எவ்வகையான சொற்பிரயோகமும் என்னால் அதில் பிரயோகிக்கப்படவில்லை இதற்கு முன்னரும் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் அனைவரும் சீருடை அணிய வேண்டும் என அலுவலக ஊழியர் குழாமிற்கான கூட்டத்தில் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக சீருடை அணியும் செயற்பாடு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதுடன் இதில் இஸ்லாமிய பெண் உத்தயோகத்தர்களும் சீருடையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேலையினை அணிந்து வரவேண்டும் என என்னால் ஒரு போதும் கட்டாயப்படுத்தப் படவில்லை. எனவே குறித்த செய்தியில் எனக்கெதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யானையை....

தன்னியக்கமாக பாரிய ஒலி, ஒளிகளை எழுப்பி யானைகளைத் துரத்தும் வகையில் மேற்படி பொறி தயாரிக்கப்பட்டுள்ளது.

சூரிய சக்தியைக் கொண்டு இயங்கும் மேற்படி பொறி மின்சாரம் இல்லாத இடத்திலும் பாவிக்கக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பொறியை வன இலாக அதிகாரிகளின் உதவியுடன் சோதனை செய்த பின்னர் இதை அறிமுகப்படுத்த உள்ளதாக திருமாறன் தெரிவித்தார்.

இவருக்கு உதவியாக மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் 12ம் வருடத்தில் கல்வி கற்றுவரும் தோவேஸ்வரன் மிதுறாஸன் எனும் மாணவனும் துணைபுரிந்து வருகின்றார். திருமாறன், ஏற்கனவே நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் பொறி தயாரித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதுமுக மாணவர்...

அழைத்துச்சென்ற கலைப்பிரிவின் இரண்டாம் வருட மாணவர்கள் 8 பேர், பகிடிவதை என்ற பெயரில் கல்லடியிலுள்ள தனியார் வீடொன்றில் தங்களை முழுநாளும் சித்திரவதை செய்ததாக பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களிடமிருந்து பலவந்தமாக மதுபானத்துக்கு பணம் அபகரித்து மதுபானம் வாங்கி குடித்து கும்மாளமடித்தனர். அத்துடன், தங்களுக்கும் மதுபானம் பருக்கியதுடன், கடுமையாக தங்களை தாக்கியதாகவும் இந்த மாணவர்கள் வாக்குமூலத்தில் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி [illegible] விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஎஸ்ஐஎஸ்....

கைப்பற்றும் படிமுறைக் குறிக்கோள்கள் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இரஸ்ய மற்றும் சீனப் பெருநிலப்பரப்புக்களை விடுத்து இந்தியா மற்றும் இலங்கையைக் கைப்பற்றும் திட்டத்தை அவர்கள் தெளிவாக இப்படத்தின் ஊடாகக் காட்டியுள்ளனர்.

இதேவேளை இந்தியாவில் அல்கொய்தாவின் கிளையொன்று தாபிக்கப்பட்டுள்ளதாக அவ்வமைப்பின் தலைவரின் கருத்துரையை மேற்கோள்காட்டி சர்வதேச செய்தி நிறுவனமான அல்ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

ஒஷாமா பின்லாடன் 2011 ஆம் ஆண்டு அமெரிக்க கொமாண்டோக்களால் கொல்லப்பட்ட பின்னர் ஐமான் அல் ஸவாஹறி அதன் தலைவராக செயற்பட்டு வருகிறார். இவர் இஸ்லாமிய சட்டத்தை சர்வதேசமயப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் முஸ்லிம் சனத்தொகையை உடைக்கும் செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தநிலையில் அதனை தடுக்கவே புதிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த முயற்சி இன்று அல்ல இரண்டு வருடங்களுக்கு முன்னரே முஜாஹஜிதீன் இயக்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அல்- கைடா தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இஸ்லாமிய பயங்கரவாதம் இலங்கைக்கு ஒரு அச்சுறுத்தல் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அண்மையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு திணைக்களத்தின் பிரிஸம் என்ற சஞ்சிகையின் புதிய வெளியீட்டு விழாவிலே இதனை கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தோல்விக்கு பின்னர், இலங்கையில் உள்ள சில முஸ்லிம் குழுக்கள் சுய பாதுகாப்புக்கு அப்பால் சென்று பல நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

சில குழுக்கள் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சிப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த நிலைமைகளை மிகவும் கவனமாக கண்காணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுதங்களைக் ....

புதிய தலைமுறைக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார். "ஆயுதத்துடன் இருந்த போது எமக்கிருந்த மரியாதை... அதேபோல விடுதலைப் புலிகளும் இன்று ஆயுதத்துடன் இருந்திருந்தால் எமது மக்களுக்கு இன்னல்கள் இல்லை" என அவர் தெரிவித்தார்.

## ஈழத்தமிழரின்....

நவம்பரில் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது" என்றார்.

"அண்மையில் இந்தியா வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒருங்கிணைந்த இலங்கைக்குள்தான் தீர்வு கேட்கிறோம் என்கிறார். ஆனால், நீங்களோ தனி ஈழம் தான் தீர்வு என்கிறீர்களே" என்று கேட்டபோது,

ஈழத் தமிழர் பிரச்சினையைப் பொறுத்தவரை ஈழத் தமிழர், புலம்பெயர்ந்த தமிழர் ஆகியோரிடம் பொது வாக்கெடுப்பு நடத்தித்தான் முடிவு செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகள் அல்ல. அவர்களிடையே வேறுபட்ட கருத்துகள் உள்ளன.

வடக்கு மாகாணத்துக்கு தேர்தல் நடந்து 2 ஆண்டுகள் ஆன பின்னரும் இதுவரை எந்த அதிகாரமும் அளிக்கப்படவில்லை என்று அவர்கள் தான் சொல்கின்றனர்.

இப் பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகக் கூறுகின்றனர். இந்தியாவின் நிலைப்பாடே இரட்டை வேடமாக உள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் கருத்தைக் கேட்டு முடிவு செய்வதுதான் சரியாக இருக்கும் என பழ.நெடுமாறன் தெரிவித்தார்.




## இரவு தொழுகை இரண்டு. இரண்டா!!

நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள், அதன் நீளத்தையும், அழகையும் கேட்க வேண்டாம்.பிறகு நான்கு ரக்அத்துகள் தொழுவார்கள், அதன் நீளத்தையும், அழகையும், கேட்க வேண்டாம். பிறகு மூன்று ரக்அத்துகள் தொழுவார்கள். (புகாரி 1147, முஸ்லிம் 738)

நபி (ஸல்) அவர்கள் இரவிலே பதினொன்று ரக்அத்துகள் தொழுவார்கள். அதில் ஒன்றை வித்ராக தொழுவார்கள். மற்றொரு அறிவிப்பில் ஒவ்வொரு இரண்டு ரக்அத்துகளுக்கும் இடையில் ஸலாம் சொல்வார்கள். ஒரு ரக்அத்தை வித்ராக தொழுவார்கள். (முஸ்லிம்: 736)

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு அறிவிப்பில் நபி (ஸல்) அவர்கள் பதிமூன்று ரக்அத்துகள் தொழுதார்கள்.முதலில் இரண்டு ரக்அத்துகள், பிறகு இரண்டு ரக்அத்துகள், பிறகு இரண்டு ரக்அத்துகள், பிறகு இரண்டு ரக்அத்துகள், பிறகு இரண்டு ரக்அத்துகள், பிறகு இரண்டு ரக்அத்துகள், பிறகு ஒரு ரக்அத் வித்ரு தொழுதார்கள். பிறகு ஒருங்கிணைத்துப் படுத்துக் கொண்டார்கள். பிறகு சுப்ஹீ தொழுகைக்கு பாங்கு சொன்னவுடன், சுருக்கமாக இரண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். (புகாரி 992, முஸ்லிம் 763)

அதே போல "ஸைத் இப்னு ஹாலித் ஜுஹ்னி (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் நபி (ஸல்) இரண்டு, இரண்டு, ரக்அத்துகளாக பண்ணிரெண்டு ரக்அத்துகள் தொழுவார்கள். பிறகு ஒரு ரக்அத்து வித்ரு தொழுவார்கள். அது தான் அந்த பதிமூன்று ரக்அத்துகள்." (முஸ்லிம் 765)



ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள் இரவிலே பதிமூன்று ரக்அத்துகள் தொழுவார்கள். அதில் ஐந்து ரக்அத்துகளை வித்ராக தொழுவார்கள். அதனுடைய கடைசியிலேயே தவிர உட்காரமாட்டார்கள். (முஸ்லிம் 737)

ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில் "நபி (ஸல்) அவர்கள் பதினொன்று ரக்அத்துகள் தொழுவார்கள். எட்டாவது ரக்அத்திலே தவிர உட்காரமாட்டார்கள். எட்டாவது ரக்அத்தில் உட்கார்ந்து அத்தஹியாத்து ஓதியப் பின் ஸலாம் கொடுக்க மாட்டார்கள்,எழுந்து தொடர்ந்து ஒன்பதாவது ரக்அத்தை தொழுவார்கள்.

தொடரும் .. ..




## வாரமொரு ஜோக்

- அருணன் -

ஓர் வீட்டின் கூரையின்மீது உல்லாசமாக ஓடி விளையாடிக்கொண்டிருந்த நன்கு கொழுத்த எலி ஒன்று கால் சிலிப்பாகி தவறி அவ் வீட்டின் எஜமானர் ஸ்பெஷலாக குடிப்பதற்கென வைத்திருந்த கள்ளுப்பானைக்குள் விழுந்து வெளியேற முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்ததை அவ்வழியாக ஸ்டைலாக நடந்து வந்துகொண்டிருந்த அவ்வீட்டின் பூனையார் பார்த்து விட்டார்.

அம்மாடியோவ்! காலையிலேயே நமக்கு இப்படி ஒரு அதிஷ்டமா என எண்ணி, தனது கரங்களால் எலியை தூக்கி நிலத்தில் மெதுவாக குத்தினார். பயத்தில் மிரண்டு போயிருந்த எலியை நையாண்டியுடன் பார்த்து இன்று காலை உணவிற்கு நீ மட்டும் போதும் என கூறி எச்சில் ஊறிய தனது வாயை அகலத் திறந்தார்.

அண்ணே சற்று பொறுங்கள். கள்ளு பானைக்குள் விழுந்து எவ்வளவு அழுக்காக உள்ளேன். இப்படியே என்னை நீங்கள் சாப்பிடடு உங்கள் உடம்பிற்கு ஏதாவது ஆகிவிட்டால் என் ஆத்மா எப்படி சாந்தியடையும். என்னை குளியலறைக்குள் அடைத்த விடுங்கள். நான்குளித்து வருகிறேன். அப்போது நீங்கள் நன்றாக சாப்பிடலாம் என்றது.



பூனையாரும் அதுவும் சரிதான் என நினைத்தவராக உன் இஷ்டப்படியே செய் என்னை ஏமாற்ற மட்டும் நினைக்காதே என கூறி எலியாரை குளியலறைக்குள் அடைத்து விட்டு வாயிலில் காவலிருந்தார். அவ்வளவுதான் கழிவு நீர் வெளியேறும் குழாய் வழியாக தப்பினோம்டா சாமி என ஓடி மறைந்தார் எலியார். நீண்ட நேரத்தின் பின் ஆத்திரத்துடன் கதவை உதைத்து திறந்த பூனையார் அங்கு எலியாரை காணாது தான் நன்கு ஏமாற்றப்பட்டதை உணர்ந்து தன் பற்களை நறநறவென கடித்தவாறே அவ்விடம் விட்டு வெளியேறினார்.

சில நாட்கள் கழித்து ஒருநாள் பூனையார் வழமை போன்று தனது இடத்திலிருந்து பாலை சுவைத்துக் கொண்டிருந்தபோது மேலே ஏதோ சப்தம் கேட்டு பார்த்தவருக்கு. தன்னை ஏமாற்றி சென்ற அதே எலியார் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்ததை கண்டு கோபம் தலைக்கேற படவா ராஸ்கல் வாடா இங்கே என அதட்டினார். பூனையாரின் அதட்டலில் மிரண்ட எலியார் ஓடுவதற்கு தயாராக காலை வைத்துக்கொண்டு என்ன அண்ணே என பயத்துடன் வினவினார்.

என்னவா? அன்று என்னடா சொல்லி சென்றாய்? கத்தினர் பூனையார்.

ஓ! அதுவா..? அது அன்று நான் வெறியில கதைத்த கதை அண்ணோய் என கூறி ஓடி மறைந்தார் எலியார்.




## ரவை நகெட்ஸ்

**தேவையான பொருட்கள்**

பாம்பே ரவை - 1 கப், சேமியா - 1 கப், வெங்காயம் - 1/2 கப் (பொடியாக நறுக்கியது), இஞ்சி பூண்டு விழுது - 2 தே.கரண்டி, மிளகாய் தூள் - 2 தே.கரண்டி, எலுமிச்சம்பழச்சாறு - 2 தே.கரண்டி, மல்லித்தழை – சிறிது, உப்பு - தேவைக்கு, எண்ணெய் - தேவைக்கு

**செய்முறை**

3 மே.கரண்டி எண்ணெயை ஒரு தாச்சியில் காய வைக்கவும். அதில் வெங்காயம், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து சிறு தீயில் வதக்கவும். பின்னர் ரவையையும் சேர்க்கவும். 5 நிமிடம் நன்கு வதக்கியபின், சேமியாவை கையால் நன்கு நொறுக்கி சேருங்கள். அத்துடன் மிளகாய்த்தூள், மல்லி, உப்பு சேர்த்து நன்கு வதக்கவும். பின் ஒரு பாத்திரத்தில் நாலரை கப் தண்ணீர் கொதிக்க வைத்து, ரவை கலவையில் சேர்த்து நன்கு கிளறி இறுகும் வரை வேகவிடவும். கடைசியில் எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து கிளறவும். ஆற வைத்து வேண்டிய வடிவத்தில் செய்துகொள்ளவும். பின் மைதாவை சற்று கெட்டியாக கரைத்து, செய்து வைத்துள்ள ரவை நக்கட்ஸை அதில் நனைத்து எடுத்து, பிரெட் தூளில் புரட்டி, காயும் எண்ணெயில் பொரித்தெடுக்கவும். தக்காளி சாஸ், இதற்குப் பொருத்தமான காம்பினேஷன் ஆகும்.



## அழகைக்கெடுக்கும் முகத்தழும்பு

முகப்பருக்கள் இல்லை என்றாலும் அழகுக்கு இடையூறாக இருப்பது கரும்புள்ளிகளும், தழும்புகளும் தான். இந்த தழும்புகளை வீட்டில் இருக்கும் சில பொருட்களை கொண்டே மிக எளிதாக சரி பண்ணலாம்.



**ஆலிவ் எண்ணெய்**

தழும்புகள் உள்ள இடத்தில் ஆலிவ் எண்ணெயை முகத்தில் தடவிக் கொள்ளுங்கள், பின்னர் மிதமான நீராவியில் முகத்தை காட்ட வேண்டும். இதன் மூலம் துளைகள் சுத்தமாகி தழும்புகளின் அடர்த்தி சிறிது சிறிதாக குறைந்து விடும்.

**சந்தனம்**

சந்தனப் பொடியை, ரோஸ் வாட்டர் அல்லது பாலுடன் கலந்து முகத்தில் தடவவும். பின்னர் சுமார் 1 மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் நன்றாக அலசி கழுவி விடவும்.

**உருளைக்கிழங்கு**

கந்தகமும், பொட்டாசியமும் கலந்துள்ள உருளைக்கிழங்கு தழும்புகளை குறைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. உருளைக்கிழங்கை பச்சையாக எடுத்து அரைத்து, அந்த சாற்றைப் பிழிந்து தழும்பு உள்ள இடத்தில் தடவிவர சரியாகும்.

**பாதாம்**

பால் அல்லது தண்ணீரில் பாதாமை 12 மணிநேரம் ஊற வைக்கவும். பாதாம் கொட்டையின் தோலை உரித்து விட்டு, நன்றாக அரைத்து, சிறிது ரோஸ் வாட்டர் கலந்து தழும்புகளில் தடவிக் கொள்ளவும்.




## ஸ்லிம்மாக ஈஸி வழி

உடல் எடையால் அவஸ்தைப்படுபவர்களுக்கு கற்றாழை ஜூஸ் மிகவும் சிறந்த பானம். அதிலும் இதனை காலை வேளையில் குடித்து வருவது மிகவும் நல்லது. தினமும் ஒரு டம்ளர் குடித்து வந்தால், உடல் எடையில் நல்ல மாற்றம் தெரிவதுடன், உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

**தேவையான பொருட்கள்**

கற்றாழை ஜெல் - 100 கிராம், எலுமிச்சை – 1, தேன் - தேவையான அளவு, இஞ்சி - 1/2 இன்ச், உப்பு - 1 சிட்டிகை



**செய்முறை**

முதலில் எலுமிச்சை பிழிந்து சாறு எடுத்துக் கொள்ளவும். பின்னர் மிக்ஸியில் எலுமிச்சை சாறு, தேன், உப்பு மற்றும் இஞ்சி சேர்த்து அரைத்து, வடிகட்டிக் கொள்ள வேண்டும். பின்பு அத்துடன் கற்றாழை சாற்றினை சேர்த்து மீண்டும் ஒருமுறை மிக்ஸியில் அடித்து குடித்தால், வெகு விரைவாக ஸ்லிம் ஸ்டைலிஸ் ஆகலாம்.

## தேவையற்ற முடிகளை நீக்க

பெண்களின் அழகை கெடுக்கும் வகையில் முகத்தில் வளரும் முடிகள் இருக்கும். அந்த முடிகள் முகத்தை கருமையாகவும், அசிங்கமானதாகவும் வெளிப்படுத்தும். அதிலும் அவர்களுக்கு வாய்க்கு மேல் பகுதியில் தான் முடி வளரும். இது மீசை போன்ற தோற்றத்தைக் கொடுப்பதால், பல பெண்கள் இந்த முடியை நீக்குவதற்கு, வாக்ஸிங், த்ரெட்டிங் மற்றும் ப்ளக்கிங் போன்ற ஹேர் ரிமூவல் முறைகளைப் பயன்படுத்துவார்கள்.

முகத்தில் வளரும் முடிகளைப் போக்க உதவியாக இருக்கும் சில இயற்கையான ஹேர் ரிமூவல்களைப் இதோ!!



- கடலை மாவில், சிறிது மஞ்சள் மற்றும் கடுகு எண்ணெய் சேர்த்து கலந்து, அதனைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால், முகத்தில் வளரும் தேவையற்ற முடிகள் நீங்குவதோடு, சருமத்தை பொலிவாகவும், அழகாகவும் வைத்துக் கொள்ள உதவியாக இருக்கும்.
- கடினமாக இருக்கும் தேனைக் கொண்டு முகத்தை மசாஜ் செய்தால், முகத்தில் வளரும் முடிகளை தடுக்கலாம். வேண்டுமெனில், தேனுடன் சிறிது எலுமிச்சை சாற்றினையும் சேர்த்து செய்யலாம்.
- சர்க்கரையை நீரில் கலந்து, அதனைக் கொண்டு முகத்தை ஸ்கரப் செய்தால், அது முகத்தில் வளரும் முடிகளை அகற்றும்.
- எலுமிச்சையில் ப்ளீச்சிங் தன்மை இருப்பதால், அது சருமத்தில் வளரும் முடியை நீக்குகிறதோ இல்லையோ, முடியின் நிறத்தை மங்க வைக்கும். ஆனால் இந்த முறையை தொடர்ந்து செய்தால், நாளடைவில் முடி வளராமல் இருக்கும்.
- ஒரு தே.கரண்டி சோள மாவில், 1தே.கரண்டி சர்க்கரை மற்றும் முட்டையின் வெள்ளை கரு ஆகியவற்றை ஒன்றாக கலந்து, அதனை முகத்தில் தடவி, உலர விட்டு கழுவினால், சருமத்தில் உள்ள தேவையற்ற முடிகள் நீங்குவதோடு, இறந்த செல்களும் வெளியேறிவிடும்.
- தினமும் மஞ்சள் தடவி குளித்து வந்தால், முடிகளின் வளர்ச்சி குறைவதோடு, முடிகளும் நீங்கிவிடும்.
- கடுகு எண்ணெய் கூட தேவையில்லாத முடிகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். அதற்கு கடுகு எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி, அதனை முகத்தில் தடவி மசாஜ் செய்ய வேண்டும்.
- பிரெட்டை பாலில் ஊற வைத்து, அதனை முகத்தில் சிறிது நேரம் தேய்க்க வேண்டும். இதனால் முகத்தில் உள்ள முடி நீங்குவதோடு, முகம் பொலிவோடு இருக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இலங்கையின் தேசிய விளையாட்டு தினம் ஏப்ரல் 06



இலங்கையின் தேசிய விளையாட்டு தினமாக ஏப்ரல் 06ம் திகதி பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. மஹிந்த சிந்தனையான தேசிய விளையாட்டை நகரில் இருந்து கிராமங்களுக்கும் கொண்டு செல்லல் எனும் தொனிப்பொருளில் தேசிய விளையாட்டு தினமாக ஏப்ரல் 06ம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. விளையாட்டு என்பது சகலருக்கும் ஒரு புத்துணர்ச்சியையும், வெற்றி தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தையும் ஏற்படுத்தவல்லது.

## ஹாக்கி அணி போட்டியை எதிர்கொள்ள தயார் நிலையில்



ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய ஆடவர் ஹொக்கி அணி தனது முதல் ஆட்டத்தில் இலங்கையுடன் மோதுகின்றது. 17வது ஆசிய விளையாட்டுப் போட்டி வரும் 19ம் திகதி முதல் அக்டோபர் 4ம் திகதி வரை தென் கொரியாவின் இன்சியோனில் நடைபெறுகிறது. இதன் பி பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய ஆடவர் ஹொக்கி அணி, செப்டம்பர் 21ல் இலங்கையையும், செப்டம்பர் 23ல் ஓமனையும், செப்டம்பர் 25ல் பாகிஸ்தானையும், செப்டம்பர் 27ல் சீனாவையும் சந்திக்கிறது. இந்திய மகளிர் ஹொக்கி அணி தனது முதல் ஆட்டத்தில் செப்டம்பர் 22ல் தாய்லாந்தையும், செப்டம்பர் 24ல் சீனாவையும், செப்டம்பர் 26ல் மலேசியாவையும் சந்திக்கிறது.

## டில்ஷானிடம் கூறியது என்ன?



சமீபத்தில் பாகிஸ்தான் அணி இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. இதன் ஒருநாள் போட்டியின் போது பாகிஸ்தான் வீரர் அகமட் ஷேஜாத் இஸ்லாமிய மதம் பற்றி இலங்கை வீரர் திலகரத்னே தில்ஷானிடன் கூறியுள்ளார். இது தொடர்பான விசாரணையை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விசாரித்து வருகிறது.

## கிரிக்கட் வீரர்களுக்கான விருதுகள்



டயலொக் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் விருது விழா பத்தரமுல்லை வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நேற்று இரவு கோலாகலமாக நடத்தப்பட்டது.

இதில் மெத்தியூஸ் அதி சிறந்த சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட வீரர் விருதையும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் அதி சிறந்த சகலதுறை வீரருக்கான விருதையும் வென்றெடுத்தார்.

லசித் மாலிங்க அதிசிறந்த சர்வதேச ஒருநாள் மற்றும் இருபது 20 கிரிக்கெட் பந்துவீச்சாளருக்கான விருகளை வென்றெடுத்தார்.

மேலும் அதி சிறந்த சர்வதேச ஒருநாள் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் விருதை மெத்தியூஸ் மற்றும் குமார் சங்கக்கார ஆகியோர் இணைந்து பெற்றனர். சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டின் அதிசிறந்த பந்து வீச்சாளருக்கான விருகை ரங்கன ஹேரத் பெற்றார். மேலும் பலர் விருதுகளை தட்டிச் சென்றனர்.

## இந்திய அணி அபார வெற்றி

இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதன் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி தொடரை கைப்பற்றிய நிலையில், இதற்கு பதிலடியாக இந்திய அணி ஒருநாள் தொடரை தற்போது 3-0 என்ற கணக்கில் வென்றுள்ளது. இன்னும் ஒரு போட்டி மீதமுள்ளது, இரு அணிகளும் 05.09 அன்று மோதவுள்ளது 91வது போட்டியாகும். இதுவரை நடந்த 90 ஆட்டத்தில் இந்தியா 50 போட்டியிலும், இங்கிலாந்து 35 போட்டியிலும் வெற்றி பெற்றன. 2 ஆட்டம் 'டை' ஆனது. 3 ஆட்டம் முடிவு இல்லை.



## வோஸ்னியாக்கியிடம் விழி பிதுங்கி வெளியேறிய ஷரபோவா

கிராண்ட்ஸிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி நியூயார்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உலகின் முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா நான்காவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். பத்தாம் நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி (டென்மார்க்) 6-4, 2-6, 6-2 என்ற கணக்கில் ஷரபோவாவை வீழ்த்தி கால் இறுதிக்கு தகுதி பெற்றார். வோஸ்னியாக்கி கால் இறுதியில் 13ம் நிலை வீராங்கனை சாரா இரானியை

# சர்வதேசச் செய்திகள்

### • விசா மறுப்பு

தென்னாப்பிரிக்காவில் வரும் அக்டோபர் மாதம் உச்சி மாநாடு ஒன்று நடக்கவுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு வாங்கிய நான்கு பேர் இணைந்து நடத்து இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள உலகம் முழுவதிலும் இருந்து பிரபலங்கள் வருகை தரவுள்ளனர். இந்நிலையில் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள விரும்பிய தலாய்லாமாவிற்கு விசா வழங்க தென்னாப்பிரிக்க அரசு மறுத்துவிட்டது.

### • 4 மாடி கட்டிடத்தின் மேல்மாடியில் மைதானம்

சீனாவில் உள்ள பள்ளியில் மாணவர்களுக்கு விளையாடுவதற்கு தேவையான விளையாட்டு மைதானம் இல்லாததால், அந்த பள்ளியின் மேல்மாடியில் விளையாட்டு மைதானம் அமைத்து சாதனை புரிந்துள்ளனர்.

### • மீண்டும் ஒரு செப்டம்பர் 11?



கடந்த 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதிதான் இரட்டை கோபுர தாக்குதல் நடந்தது. அதுமாதிரியான தாக்குதல் இந்த ஆண்டும் நடைபெற வாய்ப்பு உள்ளதாகவும், அதனால் அமெரிக்க அரசு மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என அமெரிக்க உளவுத்துறை எச்சரித்துள்ளது.

### • கலப்பு திருமணத்திற்கு சீன அரசு அனுமதி

சீனாவில் இஸ்லாமியப் போராளிகளால் தாக்கப்பட்டு வரும் சின்ஜியாங் மாகாணத்தில் ஒற்றுமை உணர்வு வளரும் விதமாக அங்குள்ள சிறுபான்மை பழங்குடியினருக்கும், ஹன்ஸ் இனத்தவருக்கும் இடையே கலப்புத் திருமணங்கள் நடைபெறுவதை சீன அரசு ஆதரிக்கிறது.

### • வித்தியாசமான தண்டனை

சீனாவில் உள்ள ஒரு கிராமத்தில் அடிக்கடி குளத்தில் இருந்த வாத்துக்கள் திருடு போவதாக வந்த தகவலை அடுத்து அங்கு காவலுக்கு ஆள் போடப்பட்டது. இதில் 14வயது சிறுவர்கள் இரண்டு பேர் வாத்துக்களை திருடியதை கையும் களவுமாக பிடித்த கிராமத்தினர் அவர்களுடைய வாயில் இறந்த வாத்துக்களை பிடிக்க செய்து இரண்டு மணி நேரம் முழங்கால் போட்டு உட்காரும் தண்டனை கொடுத்தனர். மேலும் இரண்டு வாத்துக்களை அவர்களுடைய கழுத்திலும் தொங்கவிட்டனர்.

### • தம்பதியிடம் வன்மையாக நடந்ததற்காக மன்னிப்பு

பழமைவாய்ந்த ஷரியா இஸ்லாமிய விதிகளைப் பின்பற்றும் சவுதி அரேபியாவில் பொது இடங்களில் ஆணும், பெண்ணும் கலந்து பழகுவது என்பது தடை செய்யப்பட்ட ஒன்றாகும். இதுபோன்று இஸ்லாமிய அறநெறிகளை மீறுபவர்களைக் கண்காணிக்க நல்லொழுக்க மேம்பாட்டு ஆணையம் மற்றும் துணை தடுப்பு நிர்வாகம் என்னும் இஸ்லாமிய மத சம்பந்தப்பட்ட காவல்துறை அந்நாட்டில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. கடந்த வாரம் அங்குள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் பெண்கள் மட்டும் என்ற அறிவிப்பு இருந்த வெளியேறும் வழி ஒன்றில் பிரிட்டிஷ் நாட்டவர் காணப்பட்டார். இதனைத் தொடர்ந்து ரோந்துப் படையைச் சேர்ந்த நான்கு பேர் வந்து அங்கு விசாரிக்க அது இறுதியில் அவரையும், அவரது சவுதி மனைவியையும் தாக்குவதான கைகலப்பில் முடிந்துள்ளது. இதனைத்தொடர்ந்து இந்தத் தம்பதியரிடம் ரோந்து காவல்துறையினர் மன்னிப்பு கேட்கும் அரிதான ஒரு அறிக்கை வெளியாகியுள்ளது.

### • போதையில் சிறுமி கற்பழிப்பு



அவுஸ்திரேலியாவை சேர்ந்த 17 வயது சிறுமி கடந்த 2012ம் ஆண்டு நவம்பர் 4ம் திகதி தனது நண்பர் ஒருவர் வீட்டுக்கு விருந்துக்கு சென்றுள்ளார். சக நண்பர்களுடன் குடித்து விட்டு கும்மாளம் போட்ட சிறுமியை, மற்றொரு நண்பர் ஒருவர் மெல்பர்ன் பகுதியிலுள்ள ரயில் நிலையத்தில் விட்டுச் சென்றுள்ளார். செய்வதறியாது முழித்துக் கொண்டிருந்த சிறுமியை, இந்தியாவின் ஐதராபாத்தை சேர்ந்த டாக்சி டிரைவர் சிறுமியை அழைத்து சென்று பலாத்காரம் செய்துவிட்டு வீட்டில் விட்டு சென்றுள்ளார்.

### • உக்ரைன் ரஸ்யாவின் இராணுவ வாகனத் தொடரணியொன்றை அழித்துவிட்டதாக அறிவிப்பு

உக்ரைன் தனது நாட்டு எல்லைக்குள் நுழைந்த ரஸ்யாவின் இராணுவ வாகனத் தொடரணியொன்றை அழித்துவிட்டதாக அறிவித்துள்ளது. உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ பொரொசென்கோ பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கமருனிடம் தொலைபேசி மூலமாக இதனை தெரிவித்துள்ளார்.

### • சர்ச்சைக்குரிய நடைபாலத்தை அகற்ற அனுமதி

ஜெருசலேம் நகர புனிதத் தலம் ஒன்றில் அமைக்கப்பட்டு வரும் சர்ச்சைக்குரிய நடைபாலத்தை அகற்ற இஸ்ரேல் சம்மதித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### • எபோலாவுக்கு 1900 பேர் பலி

ஆப்பிரிக்க நாடுகளை எபோலா நோய் தாக்கி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தாலும் தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எபோலா நோய்க்கு இதுவரை 1900 பேர் பலியாகி உள்ளனர். 3 ஆயிரத்து 500 பேர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### • இலங்கை அகதிகளின் நிலை!

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய பிரதமர் ரொனி எபட், இந்திய தலைவர்களுடன் இலங்கை அகதிகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### • மிகப்பெரிய மின்பண்ணை

அவுஸ்திரேலியாவில் மிகப் பெரியதாகக் கருதப்படும் சூரிய மின் உற்பத்தி பண்ணை ஒன்று உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. கென்பராவின் தென்பகுதியிலுள்ள ரொயல்லாவில் இந்த பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

### • திருமணத்தில் குழந்தை பெற்ற சம்பவம்

இங்கிலாந்து நாட்டில் உள்ள ஒரு கர்ப்பிணிப் பெண் தன்னுடைய நண்பர் ஒருவரின் திருமணத்திற்கு காரில் சென்று கொண்டிருந்தபோது திடீரென அவருக்கு பிரசவ வலி வந்ததால் கணவரின் உதவியோடு காரிலேயே குழந்தை பெற்றார்.

### • நண்பனை துரத்தி துரத்தி கத்தியால் குத்திய தமிழ் இளைஞன்

பிரித்தானியாவில் இளைஞர் ஒருவர் தன்னுடன் பள்ளியில் படிக்கும் நண்பனை கத்தியால் குத்திய அதிர்ச்சி சம்வம் ஒன்று நடந்துள்ளது.

### • நான் நினைத்தால் இரண்டே வாரத்தில் கீவ் நகரை கைப்பற்றுவேன்.

நான் நினைத்தால் இரண்டே வாரத்தில் உக்ரைன் நாட்டின் கீவ் நகரை கைப்பற்ற முடியும் என இத்தாலி பத்திரிகை ஒன்றுக்கு ரஷ்ய அதிபர் புதின் பேட்டி கொடுத்துள்ளதாக கூறப்படுவதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் நாட்டின் நாட்டின் கிழக்கு பகுதியை ர்'யாவுடன் இணைக்க வேண்டும் என அங்குள்ள கிளர்ச்சியாளர்கள் பல மாதங்களாக ஆயுதமேந்தி போராடி வருகின்றனர். இந்த கிளர்ச்சியாளர்களுக்கு ரஷ்யா ஆயுதங்கள் அளித்து உதவி செய்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல!!!



- பழ.நெடுமாறன் -

ஈழத் தமிழர்களின் பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமல்ல என, தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் கடந்த 1ம் திகதி செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

ஈழத் தமிழர் பிரச்சினையில் தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக பாஜக தலைவர்கள் இரட்டை வேடம் போடுகின்றனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற அறக்கட்டளை நிர்வாகக் குழு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில், முற்றத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை 13

## ஆயுதக் கடத்தல் மட்டு இளைஞன் விடுதலை

கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை நடாத்த மட்டக்களப்பிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தியதாக பயங்கரவாத தடைப்பிரிவுப் காவலரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் சிரேஸ்ட சட்டத்தரணி கே.வி. தவராசாவின் வாதத்தையடுத்து 03ம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார் மட்டக்களப்பு பெரிய போரைத் தீவை வசிப்பிடமாகக் கொண்ட பேரின்பம் கங்காதரன் என்ற இளைஞரே இவ்வாறு நேற்று 13

## யானையை விரட்டப் புதியபொறி

### மட்டு. இளைஞன் திருமாறன் கண்டுபிடிப்பு



மட்டக்களப்பு திருப்பெருந்துறையைச் சேர்ந்த சோமசூரியம் திருமாறன் என்பவர் காட்டு யானைகளைத் துரத்த பொறி ஒன்றைத் தயாரித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் காட்டு யானைகளினால் மக்கள் அதிகளவில் உயிர் இழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு அதிகரித்துவரும் காட்டு யானைகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இந்தப் பொறி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 13

## மின்சார வேலி அமைக்கும் நடவடிக்கைக்கு முனைப்பு

கடந்த (27) புதன்கிழமை குச்சவெளி பிதேச செயலகத்ததிற்குட்பட்ட புடவைக்கட்டு மதுரங்குடா பிரதேசத்தில் நான்கு பிள்ளைகளின் தமிழ் குடும்ப பெண் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி மரணமடைந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட சாலைமறியல் போராட்டத்தைக் கைவிடுமாறும் நடவடிக்கை எடுப்பேன் என மாகாண சபை உறுப்பினர் அன்வர் அவர்களால் வழங்கப்பட்ட உறுதிக்கமைய கடந்த (29) வெள்ளிக்கிழமை குச்சவெளி பிரதேச செயலகத்தில் கூட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

பிரதேச செயலாளர் தலைமையில் மாகாண சபை உறுப்பினர் அன்வர், குச்சவெளி காவல் நிலைய பொறுப்பதிகாரி, வன விலங்கு திணைக்களத்தின் அதிகாரிகள்,குறித்த பிரதேசத்தின் கிராம சேவகர் பிரதேசத்திக் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏனைய சங்கங்களின் தலைவர்கள் உட்பட புடவைக்கட்டு கல்லராவ சங்கங்களின் மூவின தலைவர்களும் பங்கேற்றனர்

இதுவரைக்கும் கடற்படை சிப்பாய் உட்பட சுமார் ஒன்பது நபர்கள் காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்திருப்பதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

வன விலங்கு அதிகாரியால் ஏற்கனவே குறித்த பகுதிக்கான பாதுகாப்பு தொடர்பாக திட்டமிடப் பட்டதாகவும் அதற்கான நிதி தமக்கு கிடைக்கப் பெறவில்லை எனத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அதற்கான நிதியை மாவட்ட பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பெற்றுத் தருவதாக அன்வர் தெரிவித்தார். அத்துடன்......... 13



## -புதுமுக மாணவர்கள் வதை - மூவர் வைத்தியசாலையில்





கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட முதலாம் வருட மாணவர்கள் மூவர் மோசமான பகிடிவதைக்கு உள்ளான நிலையில், உடல் நிலை பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் புதன்கிழமை (3) மாலை அனுமதிக்கப்பட்டு மறுநாள் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சூழாவடியைச் சேர்ந்த ஆர்.தனஞ்செயன் (வயது 20), மாமாங்கத்தைச் சேர்ந்த ஆர்.விஜிகரன் (வயது 22), புன்னைச்சோலையைச் சேர்ந்த சி.சபேஸ்கரன் (வயது 21) ஆகியோரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

வந்தாறுமூலையிலிருந்து கல்லடிக்கு கடந்த புதன்கிழமை (3) காலை தங்களை 13

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 06.09.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org